Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 24 சனிக்கிழமை (08.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 100

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...

SPICE TRAVELS & TOURS (PVT) LTD® IATA

412, First Floor, Hospital Road, Jaffna. (Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

# உயிர் அச்சுறுத்தலுடன் வாழும் யாழ். மக்கள்; நிலைமையை விளக்கி வத்திக்கானுக்கு அறிக்கை!


(கொழும்பு)

**யாழ். குடாநாட்டு மக்கள் உயிர் அச்சத்துடன் தமது வாழ்க்கையை நகர்த்துகின்றனர் என்றும் அண்மைய நாட்களில் யாழ். குடாவில் அதிகரித்துச் செல்லும் கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல்கள் காரணமாக யாழ். மக்களின் அச்ச உணர்வு உச்சநிலை அடைந்திருப்பதாக யாழ். கத்தோலிக்க குருமார்கள் தெரிவித்ததாக கத்தோலிக்க இணைய வலையமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தின் தற்போதைய பதற்றமான நிலைவரம் குறித்து கத்தோலிக்க தலைமைப்பீடமான வத்திக்கானுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கத்தோலிக்க குருமார் அமைப்பு ஒன்று தற்போது தகவல் வெளியிட்டுள்ளது.


கத்தோலிக்க குருக்கள் சிலரையும், பொது மக்களின் கருத்துக்களையும் ஆதாரம்காட்டி கத்தோலிக்க இணைய வலையமைப்பான 'கத் நியூஸ்' என்ற இணையம் மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த சில நாட்களிற்குள் மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இளம் பெண்ணொருவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த மூன்று தசாப்தங்களின் பின்னர் பெருந்தொகையான தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று பொலிஸ் பயிற்சியை முடித்து வெளியேறினர்.

## யாழ். குடாநாட்டின் அசம்பாவிதம் குறித்து ஒருநாள் விவாதம் நடத்த அரசு இணக்கம்



(கொழும்பு)

யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து நாடாளுமன்றில் ஒருநாள் விவாதமொன்றை நடாத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்த ஒருநாளை ஒதுக்க முடியும் என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பல மாதங்களாக விளக்கமறியலில் உள்ள கைதிகளுக்கு விடுதலை


### நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்று வருவதாகவும், அவர்களின் விடுதலை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பல மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை பெறக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் திருத்தச் சட்டமூலத்தை (11 ஆம் பக்கம் பார்க்க)



## யாழில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள் நிலைமையை விளக்குகிறார் பொலிஸ் அதிகாரி



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மையில் நடைபெற்ற மூன்று கொலைச்சம்பவங்களும் தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளின் மூலம் நடைபெற்றுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டேவின் பத்மதேவ தெரிவித்துள்ளார்.

குடாநாட்டு குற்றச்செயல்கள் குறித்து அதனைத் தடுப்பதற்கு பொது மக்களின் பங்களிப்புடன் நடவடிக்கை எடுக்கு முகமாக பொலிஸ் மாநாடு ஒன்று நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொலிஸாரினால் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு யாழ். குடாநாட்டின் தற்போதைய (11 ஆம் பக்கம் பார்க்க)


## யாழ். குடாவில் சிவில் பாதுகாப்பு ஜனாதிபதியிடம் அரங்கம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் சிவில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் பொதுமக்களின் அச்சமின்றிய வாழ்வுக்கு உத்தரவாதம் வழங்கவும் பாதுகாப்புப் படையினருக்கு ஜனாதிபதி உத்தர விடவேண்டும் என்று தமிழக் கட்சிகளின் அரங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டில் சிவில் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க பாதுகாப்பு படையினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தர விட வேண்டும் என தமிழ் கட்சிகளின் அரங்கம் கோரிக்கை விடுப்பதாகவும் ஜனநாயக மக்கள் (11 ஆம் பக்கம் பார்க்க)

# கோத்தபாய - ரட்ணசிறி முறுகல்நிலை உச்சம் அரசுக்கு உள்வீட்டு நெருக்கடியால் சங்கடம்!



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கும் இடையில் கருத்துமோதல் உச்சமடைந்துள்ளது.

இக்கருத்து மோதலின் உச்சக்கட்டமாக சட்ட நடவடிக்கை, ஒழுக்காற்று நடவடிக்கை என்று இருவருக்குமிடையில் ஒருவித பனிப்போர் ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

இதனால் ஒருவர் மீது ஒருவர் கடும் சீற்றம் கொண்டுள்ளனர். இதன் காரணமாக அரசின் உயர்மட்டத்தில் இப்பிரச்சினை அனைவராலும் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

முன்னாள் பிரதமரும், அமைச்சருமான ரட்ணசிறி விக்கரமநாயகவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக ரட்ணசிறி விக்கிரமநாயக்க இதுவரையில் மேற்கொண்ட சட்ட விரோத செயற்பாடுகள் குறித்து தம்மிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் குரல் வானொலி சேவைக்கு


# ஒலிபரப்புச்சாதனங்களை அரசே பெற்றுக்கொடுத்தது

## நோர்வேயின் உதவியுடன் அதை வழங்கியதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

**புலிகளின் ஊடகமான 'புலிகளின் குரல்' வானொலிக்குத் தேவையான ஒலிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு உதவுமாறு நோர்வேயிடம் இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.**

**இவ் விபரம் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல் பரிமாற்றக் குறிப்புகளில் இடம்பெற்றுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.**



இலங்கை அரசாங்கம் தமது தூதுரகத்திடம் இந்த வேண்டுகோளை விடுத்ததாக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தம்மிடம் கூறியதாக 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி இடப்பட்ட இத் தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் ஒலிபரப்புத் தொடர்பான விதிகளின் கீழ் செயற்படுவதற்கான உடன்பாடு ஒன்றின் அடிப்படையிலேயே இந்த ஒலிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நோர்வேயின் உதவியை நாடியதாக அத் தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஒலிபரப்புச் சாதனங்களை நேரடியாக புலிகளுக்கு வழங்க முடியாது எனவும், இலங்கை அரசாங்கத்தின் சமாதான செயலகத்திடமே வழங்க முடியும் எனவும் நோரவே கூறியதாக இத்தகவல் பரிமாற்றக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த ஒலிபரப்புச் சாதனங்கள் கப்பல் மூலம் கடந்த மாதம கொழும்புத் துறைமுகத்துக்கு ஒரு கொள்கலனில் கொண்டு செல்லப்பட்டதாக 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி இடப்பட்ட இத் தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட இக்கொள்கலன் சுங்கவரி செலுத்தப்படாமலேயே கொண்டு செல்லப்பட்டதாகவும், நோர்வேத் தூதரகம் இந்த ஒலிபரப்புச் சாதனங்களை இலங்கை அரசாங்கத்தின் சமாதான செயலகத்திடம் கையளித்த பின், இச் சாதனங்கள் படைத்துறை அமைச்சின் உதவியுடன் புலிகளுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஊடகமான "புலிகளின் குரல்" வானொலியை சட்டபூர்வமாக்கும் நோக்கத்துடனேயே இலங்கை அரசாங்கம் இந் நடவடிக்கையை மேற்கொண்டதாக இத் தகவல் பரிமாற்றக் குறிப்பு தெரிவிக்கின்றது.

புலிகளின் குரல் வானொலி அக் காலப்பகுதியில் குறைந்த சக்தி கொண்ட பண்பலை ஒலிபரப்பையே மேற்கொண்டு வந்த நிலையில், புதிதாகக் கிடைத்த ஒலிபரப்புச் சாதனங்களின் மூலம் புலிகளின் குரல் வானொலியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கேட்கக் கூடியதாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிபரப்பு சாதனங்கள் சிங்கப்பூரில் இருந்து சுமார் 90 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, "புலிகளின் குரல்" வானொலிக்கு இப் புதிய ஒலிபரப்புச் சாதனங்கள் வழங்கப்படுவது குறித்து இந்திய இலங்கை அரசாங்கத்திடம் கவலை தெரிவித்தது.

இந்த ஒலிபரப்புச் சாதனங்களைக் கொண்டு புலிகள் தமிழ் நாடு வரை தமது ஒலிபரப்பை மேற்கொள்ள முடியும் என்பதே இந்திய கவலை தெரிவிப்பதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் வெளியான போது இலங்கை அரசாங்கத்துக்கு ஜே.வி.பி கடும் கண்டனம் தெரிவித்ததாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத்தாக்கல் 20 ஆம் திகதி ஆரம்பம் - அரசாங்கம் அறிவிப்பு

308 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுப் பத்திரங்கள் ஜனவரி 20 முதல் 27 ஆம் திகதிவரை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களில் ஏற்கப்படும் எனத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனவரி 27 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் வேட்புமனு தாக்கல் முடிவடையும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணமாக ஒவ்வொரு வேட்பாளருக்கும் 250 ரூபா வீதம் ஜனவரி 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் செலுத்த வேண்டும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## நாடாளுமன்றம் 30 நிமிடங்கள் ஒத்திவைப்பு

நாடாளுமன்றம் 30 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சிரேஸ்ட அமைச்சர்கள் தொடர்பில் இடம்பெற்ற விவாதத்தின் போது ஏற்பட்ட அமளி துமளியை அடுத்தே பிரதி சபாநாயகர் நேற்று நாடாளுமன்றை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைத்துள்ளார்.

## மாணவர்களுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி தி.கமலநாதன் அறக்கொடை நிதியத்தினரால் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பாதணிகள் கல்வி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றபோது, அறக்கொடை நிதியத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசாவினால் வைபவரீதியாக மாணர்களுக்குப் பொதிகள் வழங்கப்பட்டன. (21)

## கலாபூஷணம் விருதுபெற்ற இசையருவியின் கௌரவிப்பு விழா

(கோண்டாவில்)

கலாபூஷணம் விருது பெற்ற பிரபல நாதஸ்வர வித்துவான் இசையருவி வி.கே.பஞ்சமூர்த்தியின் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் பிள்ளையார் ஆலய பரிலானசபைத் தலைவர் இ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

கோண்டாவில் வாழ் மக்களால் முன்னெடுக்கப்படும் இந்தக் கௌரவிப்பு விழாவுக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருள்வேல், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், இளைப்பாறிய பாராளுமன்ற சிரேஷ்ட அறிக்கையாளர் செ.நடராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம், முத்தமிழ்மணி ஆசிரியர் செ.சோகலே, பிரபல தவில் வித்துவான் இ.முருகானந்தம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், உப்பு மடம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.சதீஸ்கந்தராஜாக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

## புதிய நியமனம்

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இ.அனுரகாந்தன் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிற்கு இடமாற்றம் செயயப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு செல்வி இரத்தினசிங்கம் அகல்யா விளையாட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (08)

## வருடாந்த ஒன்றுகூடல்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், செயலகத்தில் கடமையாற்றி இளைப்பாறிச் சென்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழாவும் இன்றைய தினமான 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இந்த ஒன்றுகூடல் நிகழ்வும் சேவை நலன் பாராட்டு விழாவும் இடம்பெறவிருக்கின்றது. (05)

## உயிர்வாழும் சான்றிதழை சமர்ப்பிக்க விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

ஆண்டுதோறும் தை மாதம் ஓய்வூதியம் பெறுபவர்களால் நிரப்பி உறுதிப்படுத்தி, சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்குனருக்கு சமர்ப்பிக்க வேண்டிய படிவங்கள் தை மாத சம்பள வவுச்சருடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது பிரதேச கிராம சேவையாளரிடம் தாங்கள் தற்பொழுது உயிருடன் தான் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்தி இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

தவறுபவர்கள் அல்லது அதற்கு பிந்தி அனுப்புவர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தப் படக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## வழுக்கையாற்றில் பாய்ந்தது மோட்டார் சைக்கிள்

(யாழ்.நிருபர்)

சண்டிலிப்பாய் ஐந்துகண் பாலாற்றில் இளைஞர் ஒருவர் தவறுதலாக விழுந்து காயம் எதுவும் இன்றி தப்பிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மதகின் புனரமைப்புக்காக மதகின் அருகே தற்காலிகமாக அமைக்கப்பட்ட நடைபாதையூடாக மோட்டார் சைக்கிளில் பயணம் மேற்கொண்ட சமயம் இவ்விபத்து ஏற்பட்டது. தவறி விழுந்த இளைஞர் காயம் எதுவும் இன்றித் தப்பினார். (18)

## மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 10ஆம் திகதி திங்கட்கிழமையும், 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய மூன்று தினங்களிலும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

10ஆம் திகதி திங்கட்கிழமை கரந்தன், நீர்வேலி, கோப்பாய, சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலும்,

11ஆம் திகதி செவ்வாயக்கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்கிளில் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும், மேற்படி மூன்று தினங்களிலும் திருத்த வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்துக்கு முன் மின்விநியோகம் வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## கௌரவிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆளுநர்சபை உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்களைக் கௌரவிக்கும் விழாவும், பேராசிரியர் வி.க.கணேசலிங்கத்தினால் எழுதப்பட்ட "BIOLOGY OF ESSENTIAL HUMAN DISEASES" என்னும் நூல் வெளியீட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட அறுவை சிகிச்சை நிபுணரும், யாழ்.மருத்துவ சங்கத் தலைவருமான வைத்தியர் எஸ்.ரவிராஜ் பிரதம விருந்தினராகவும் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை உப தலைவர் வைத்தியர் வை.தியாகராசா, வைத்தியர் என்.சிவராசா, வைத்தியர் கே.சி.யமுனானந்த ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (08)

## பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சை அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி 1-2007 பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

மாணவர்கள் பரீட்சை முடிவுகளை 10.01.2011 திகதி திங்கட்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சை அலகில் பார்வையிடலாம் என வெளிவாரிப் பரீட்சைப் பதிவு இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார்.

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால், பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அது போலத்தான் பழமையான கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.

- அறிஞர் அண்ணா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## சுதந்திரக் காற்று

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதையடுத்து அம்மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியன நடத்தப்பட்ட பின்னர், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்த அரசு முன்வந்திருப்பது ஜனநாயகத்தின் மீது மக்களை நம்பிக்கை கொள்ள வைக்கும் செயலாகக் கருதலாம்.

நாட்டிலுள்ள 330 உள்ளூராட்சி மன்றங்களில், 228 பிரதேச சபைகள் மற்றும் 40 நகர சபைகளையும் உள்ளடக்கிய 228 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவந்ததும், அரசியல் கட்சிகள் யாவும் சுறுசுறுப்படைந்துள்ளன.

வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாநகர சபையும், வவுனியா நகர சபையும் கலைக்கப்படமாட்டாது என அரசு அறிவித்துள்ள நிலையில், சுமார் 15 வருட கால. இடைவெளிக்குப் பின் தமிழர் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற இருப்பது வரவேற்கத்தக்க நிகழ்வாகும்.

இது வரை காலமும் அரச அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த, இந்த உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கினவா என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாகும்.

அரச அதிகாரிகளின் கைகளில் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் நீண்டகாலம் இருந்து வந்தமையால் அவர்கள் தாம் மக்கள் சேவகர்கள் அல்லர் என்றும், அவர்களது எஜமானவர்கள் என்ற நிலையிலேயே தம்மை உருவகித்து நிர்வாகம் நடத்தினர்.

நடைபெறப் போகும் தேர்தல்கள் மூலம் மக்கள் கையில் நிர்வாகம் ஒப்படைக்கப்படும் போது அங்கு மக்கள் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு இயங்க ஏதுவாகிறது.

தேர்தல்கள் எப்போது அறிவிக்கப்படுகிறதோ அக்கணமே சில அரசியல் கட்சிகள் மக்கள் மீது அக்கறை காட்டுவதான செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கி, தேர்தலில் போட்டியிடுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் சுறுசுறுப்படையத் தொடங்கியுள்ளனர்.

மக்களைப் பொறுத்தவரையில் மக்களுக்குச் சேவை செய்யக்கூடியவர்கள் யார் என்று அவர்களுக்குத் தெரியும். சுயநலம் கொண்ட அரசியல் தலைமைகளை மக்கள் எப்போதோ இனங்கண்டு கொண்டார்கள். வெற்றுக் கோஷங்களுக்கு மக்கள் ஏமாறிய காலம் மலையேறிவிட்டது. மக்களோடு மக்களாக இருந்து அர்ப்பணிப்புடன் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய தமிழ்த் தலைமையையும் அவர்கள் இனங்கண்டுவிட்டார்கள்.

எது எப்படி இருப்பினும் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர் பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பு மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் ஆட்சி அதிகாரம் மக்கள் கையில் ஒப்படைக்கப்படும்போது இரவு, பகல் என்று பாராது அர்ப்பணிப்புடன் செயலாற்றக் கூடிய மக்கள் சேவையாளர் கைகளிலேயே ஒப்படைக்கப்பட வேண்டும்.

மக்களை அரசியல் பகடைக்காய்களாக வைத்து அரசியலில் சடுகுடு விளையாடுபவர்களை மக்கள் விலக்கிவைத்து, தமது தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்யக்கூடியவர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்ய வேண்டும். 15 வருடங்களுக்குப் பிற்பாடு ஆட்சி அதிகாரம் மக்கள் கைகளில்- அதுவும் நல்லவர்கள், வல்லவர்கள், நேர்மையானவர்கள் கையில் கிடைப்பதை நடைபெறப்போகும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் உறுதிப்படுத்தும் என்பது நிச்சயம்.

-ஆசிரியர்-

# பாடசாலையை விட்டுத் தப்பிச்சென்ற மாணவி சமுர்த்தி அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டார்!

(தொல்புரம்)

கோண்டாவில் பகுதி பிரபல பாடசாலை ஒன்றிலிருந்து தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவி ஒருவர் பாடசாலையைவிட்டுத் தப்பிச் சென்ற சமயம் திருநெல்வேலிப் பகுதியில், சமுர்த்தி அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வன்னிப்பகுதியைச் சொந்த இடமாகக்கொண்ட தாய், தந்தையரை வன்னிப் போரின் போது இழந்த பாடசாலை மாணவி ஒருவர் அவரது உறவினர்களால் திருநெல்வேலியில் இயங்கும் கருணாலயம் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு கோண்டாவில் பகுதி பாடசாலையில் கல்வி பயின்று வந்தார்.

கடந்த புதன்கிழமை வழமை போல இவர் ஏனைய பிள்ளைகளுடன் பாடசாலை சென்று நண்பகல் வேளை பாடசாலையை விட்டு வெளியேறி வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவருடன் ஏறி பலாலி வீதியால் பயணித்துள்ளார்.

மேற்படி மாணவி பலாலி வீதியில் உள்ள பழைய நல்லூர் பிரதேச செயலக வளாகத்திற்கு முன்னால் நின்ற சமுர்த்தி அலுவலரிடம் அவ்விடத்தை விசாரித்துள்ளார். இதன்போது சந்தேகம் கொண்ட அலுவலர், மாணவியைப் பாடசாலைச் சீருடையுடன் ஏற்றி வந்த இளைஞரை விசாரித்தபோது, மாணவியை தமக்குத் தெரியாது எனத் தெரிவித்த அவ்விளைஞர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

தொடர்ந்து மாணவியை விசாரித்த அலுவலர் தமது மேலதிகாரிக்குத் தகவலைத் தெரியப்படுத்தி குறித்த பாடசாலை அதிபருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு விபரத்தை உறுதிப்படுத்தியதுடன் கருணாலய நிர்வாகிக்கும் உடன் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த கருணாலய நிர்வாகி மாணவியைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன் மாணவியின் உறவினர்களிடமும் தகவலை வழங்கினார். (26)

# வடக்கில் யுத்தம் நிறைவடைந்த நிலையில் மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்கின்றனர்!

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

வடக்கில் பயங்கரவாத யுத்தம் நிறைவடைந்து தற்போது மக்கள் இயல்பு வாழ்க்கை நடாத்தி வருவதாகவும், அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் தற்போது சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நெற்செய்கை, உழுந்து, நிலக்கடலை, குரக்கன் என அப்பகுதி விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக, உரமானியங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெற்செய்கைக்கான உரமானியத்தை வழங்கினார். தற்போது தேங்காய் உற்பத்திக்காக 2280 மில்லியன் ரூபாவரை உரமானியத்திற்காகவும் அவர் வழங்கியுள்ளார். இவ்வாறு உள்நாட்டு உற்பத்தியாளர்களின் நலன்கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசுக்கு எதிரான எவ்வித அழுத்தத்தையும் சர்வதேச நாணய நிதியம் விடுக்கவில்லை!

## அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் எவ்விதமான அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லையென பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1994 ஆம் ஆண்டு முதல் நட்டத்திலேயே இயங்கி வந்தது. இதன் மூலம் தொடர்ச்சியான வருமான வீழ்ச்சி ஏற்பட்டது. எனினும் கடந்த 2005 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நட்டத்தைக் குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்துள்ளன. இதற்கமைய கடந்த வருடம், கூட்டுத்தாபனத்தில் ஏற்படும் நட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் உலகசந்தையில் எரிபொருளின் விலை 12 ரூபாவால் அதிகரித்த போதிலும் இலங்கையில் அது அதிகரிக்கப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.



# பிரதி அஞ்சல் அதிபராக இரட்ணசிங்கம் பதவியேற்பு

(யாழ். நிருபர்)

வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபராக எஸ். இரட்ணசிங்கம் நேற்று உத்தியோக பூர்வமாகத் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ். பிரதம தபாலக கட்டடத்தின் பிரதி அஞ்சல் மா அதிபர் அலுவலகத்தில் இந்தப் பதவியேற்பு இடம்பெற்றது.

தொடர்ந்து புதிய பிரதி தபால் மா அதிபர் தபாலக உயரதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேசமயம் முன்னர் பிரதி அஞ்சல்மா அதிபராகக் கடமையாற்றிய வி. குமரகுரு பதவியுயர்வுடன் கொழும்பு அஞ்சலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார். (18)

# ஓய்வூதிய நிதியத்தில் சேராதவர்கள் படிவங்களை ஒப்படைக்க அறிவிப்பு!

(மண்டைதீவு)

நல்லூர் பிரதேச செயலக நம்பிக்கை நிதியத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டம் தொடர்பான சுற்றறிக்கை ஒன்று இந்த மாத பென்சன் வவுச்சருடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. அடுத்த மாதம் நடைபெறும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள உரித்துடமை பெறுவதற்காக இதுவரை இந்த பகிரங்க சேவை ஓய்வூதியர் நிதியத்தில் இதுவரை சேர்ந்து கொள்ளாதவர்கள் 15.02.2010ஆம் திகதிக்கு முன்னதாக படிவங்களை பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியில் பெற்றுப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நிதியத்தில் இருந்து பெறக்கூடிய நலன்களும் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. (23)

# யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் அதிகரிக்கும் வெங்காய விலை

(யாழ். நிருபர்)

யாழ். குடாநாட்டிலேயே வெங்காயத்தின் விலை தினம் தினம் கிடுகிடுவென அதிகரித்துச் செல்கின்றது. திருநெல்வேலிச் சந்தையில் 220 ரூபாவாக விற்கப்பட்ட வெங்காயம் சடுதியாக கிலோ 240 ரூபாவாக உயர்ந்து காணப்பட்டது.

இவ்வாறு நாளுக்கு நாள் வெங்காய விலை அதிகரித்துச் செல்வதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்த வெங்காயத்திற்கு மாற்றீடாக நுகர்வோர் தற்போது லீக்ஸ் மரக் கறியைப் பயன்படுத்தி வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் அண்மையில் பெய்த கனத்த மழையினால் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டிருப்பதும் மற்றும் அரசாங்கம் வெங்காயத்தை இறக்குமதி செய்யாததும் இந்த விலை அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (18)

## நெடுந்தீவில் புதிய விகாரை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் புதிய விகாரை ஆலயமொன்று கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயத் திறப்பு விழாவில் நெடுந்தீவு பதில் உதவிப் பிரதேச செயலர் மு. நந்தகோபால் உட்பட கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (05)

## பல ஆயிரம் ரூபா செலவில் திருத்தப்படும் புத்தூர்சந்தை

(அச்சுவேலி)

பொதுமக்களினதும், வியாபாரிகளினதும் நன்மை கருதி புத்தூர் பொதுச்சந்தை பல ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைத்துப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. வலி.கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிற்குட்பட்ட இப்பொதுச்சந்தையின் முன்னைய கட்டடம் தடுப்புச் சுவர்களோ அல்லது தடுப்புக் கம்பி வலைகளோ இன்றித் திறந்த நிலையில் இருந்து வந்தது.

ஆனால், தற்போது அரைச்சுவர் எழுப்பப்பட்டு அதன் மேல் கம்பி வலையினால் தடுப்புக்கள் அமைக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டும் வருகின்றது. இதனால் சந்தையின் உட்பகுதிக்குள் ஆடு, மாடு, நாய் போன்ற கால்நடைகள் மற்றும் காகம் போன்ற பிராணிகள் உள்ளே நுழைய முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் சந்தைப் பகுதியைச் சுகாதாரமாகப் பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. (03)





நீரிழிவு நிலையத்தால் நடத்தப்பட்ட சமையல் ஆய்வில், உணவைப் பரிசோதிப்பதையும், அதில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (05)

# நீரிழிவு நிலையத்தால் நடாத்தப்பட்ட சமையல் குறித்த ஆராய்ச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமையல் சம்பந்தமான ஆராய்ச்சி நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.**

இந்நிகழ்வில் பெருந்தொகையானோர் பங்குபற்றி தமது ஆராய்ச்சி மூலம் புதிதாகக் கண்டறிந்த உணவு வகைகளைச் சமைத்துக் காண்பித்தனர். ஆரோக்கியமான, உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்காத உணவுப் பொருட்களைக் கொண்டு பல சுவையான உணவு வகைகள் இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ் உணவு வகைகளிலிருந்து 15 அதிசிறந்த உணவு வகைகள் தெரிவு செய்யப்பட்டன. இவ் உணவு வகைகளின் தொகுப்பானது நூலாக, நீரிழிவு சிகிச்சை நிலையத்தால் நடத்தப்படவுள்ள மாபெரும் விழிப்புணர்வுக் கண்காட்சியில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலைப் பொதுமக்களனைவரும் கண்காட்சி நிகழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இப்போட்டியில் உற்சாகத்துடன் பங்கு பற்றி முதலாவது இடத்தை பங்குணராஜாவும், இரண்டாமிடத்தை திருமதி கு. சரஸ்வதியும், மூன்றாமிடத்தை திருமதி சி. கீதநந்தினி மற்றும் திருமதி தி. புவியரசி ஆகியோரும் தட்டிச் சென்றனர். இப்போட்டி நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழும், பணப் பரிசில்களும் கண்காட்சியில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது. இவ் உணவு வகைகளின் தெரிவில் நடுவர்களாக டாக்டர் பவானி பசுபதி ராஜா (பணிப்பாளர் யாழ். போதனா வைத்திய சாலை), டாக்டர் எஸ். ரவிராஜ் (பொது சத்திர சிகிச்சை நிபுணர் - யாழ். போதனா வைத்திய சாலை), வசந்தி அரசரட்ணம் (பேராசிரியர் யாழ். மருத்துவபீடம்), டாக்டர் கே. கண்ணதாசன் (விரிவுரையாளர் நோயியல் அறை, யாழ். மருத்துவபீடம்), திருமதி ஆர். வல்லிபுரநாதன் (அதிபர், தாதியர் பயிற்சிப் பாடசாலை), கே. கிருஷ்ணகுமார் (உள சமூக நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை), கே. மிகுந்தன் (தலைவர், விவசாய உயிரியல்துறை,விவசாயபீடம்) திருமதி ஆர். ராகினி (கிராம சேவையாளர் நல்லூர்), ஞா. ரட்ணசிங்கம் (ஆசிரிய நிலைய முகாமையாளர், வலயக் கல்விப் பணிமனை), என். வில்வநாதன் (சிரேஷ்ட போதனாசிரியர், தாதியர் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்), பீ. உதயகுமார் (பதில் தாதிய பரிபாலகர்) டி. அருளானந்தம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி) ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

# ஒஸ்மானியாக் கல்லூரியில் விசேட நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கான மீள்குடியமர்வு மற்றும் பிரச்சினைகளை ஆராய்வது தொடர்பான நடமாடும் சேவை ஒன்று ஒஸ்மானியாக் கல்லூரியில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம் மற்றும் பிற மாவட்டங்களில் தங்கியிருந்து தற்போது மீளக்குடியமர்ந்துவரும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேறுவது தொடர்பாக அவர்களின் பிரச்சினைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஆராயும் முகமாக இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்தச் சேவையில் பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம், சுகாதார சேவைத் திணைக்களம், தேர்தல்கள் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், மாவட்டப் புனர்வாழ்வுப் பகுதி, யாழ். மாநகர சபை, தேசிய சேமிப்பு வங்கி, ஆட்பதிவுத் திணைக்களம், காணித் திணைக்களம், சமூகசேவைத் திணைக்களம் போன்ற திணைக்களங்களின் அதிகாரிகளை அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி சேவைகளை இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேறிய முஸ்லிகம் மக்கள் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் மௌலவி சுபியான் கேட்டுக்கொண்டுள்ளார்.


## கணக்கு விபரங்களை ஒப்படைக்கவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளின் தர உள்ளீட்டுக் கணக்கு விபரத்தினை, தரப்பட்ட மாதிரிக்கமைவாகப் பூர்த்தி செய்து காலம் தாழ்த்தாது தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக நிதிக் கிளையில் ஒப்படைக்கும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# பெருமளவு பனம் விதைகள் கடந்தவருடம் நாட்டப்பட்டன

(யாழ்ப்பாணம்)



இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் 2010ஆம் ஆண்டு பத்து இலட்சத்து 43 ஆயிரத்து 298 (1,043,298) பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து 87 ஆயிரத்து 778 பனம் விதைகளும், கற்பிட்டியில் 45 ஆயிரத்து 250 விதைகளும், கல்முனையில் 89ஆயிரத்து 500 விதைகளும், முல்லைத்தீவில் 70 ஆயிரத்து 800 விதைகளும், கிளிநொச்சியில் இரண்டு இலட்சத்து 11 ஆயிரத்து 500 விதைகளும், திருகோணமலையில் 54 ஆயிரத்து 620 விதைகளும், வவுனியாவில் 61 ஆயிரம் விதைகளும், மட்டக்களப்பில் 92 ஆயிரத்து 850 விதைகளும், மன்னாரில் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் விதைகளும் நடுகை செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நிகழ்த்தப்படும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது, அதற்கான மக்களின் பங்களிப்புத் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. மக்கள் தமக்கு ஏற்படும் சந்தேகங்களை பொலிஸ் அத்தியட்சகரிடம் தெரிவித்து அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, அனைத்துப் பொதுமக்கள், வர்த்தகர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (54)

# கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் 1500 பேருக்குத் தடுப்பூசி ஏற்றல்!

(வவுனியா)

செட்டிகுளம் கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் சுமார் 1500 பேருக்கு ஏ.எச்.-1, என் 1 காய்ச்சலுக்குரிய தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

விரும்பியவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாமென்று பொது அறிவிப்பு விடுக்கப்பட்டபோது, பலர் முன்வந்து தடுப்பூசி போட்டதாக செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. சுதாகரன் தெரிவித்தார்.

அத்துடன் செட்டிகுளம் வைத்தியசாலையில் 800 பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தற்போது பருவ மழை பெய்து வருகின்ற போதிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நிவாரணக் கிராமத்தில் தொற்றுநோய்கள் ஏற்படவில்லையெனத் தெரிவித்த டாக்டர் கே. சுதாகரன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குளோரின் கலக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதுடன், அங்குள்ள கழிவுப் பொருட்களும் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# யாழ்.குடாநாட்டுக்கான குடிநீர்த் திட்டம்
# 165 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

***இரணைமடுவில் இருந்து யாழ்.குடாநாட்டு மக்களுக்கும் கிளிநொச்சிநகர், பூநகரி, பளை ஆகிய பகுதி மக்களுக்கும் குழாய் வழியாகக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் 164.4 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாக யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.***

இரணைமடுவில் இருந்து குடிநீர் குழாய்வழியாக எடுத்து வருவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அரச அதிபர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

இரணைமடுவில் இருந்து யாழ்.குடா நாட்டிற்கு குடிநீர்த் தேவைக்காக நீரைக் கொண்டு வருவது என்பது சாதாரண விடயமல்ல. இருப்பினும் அதனைக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகள் வரவேற்கத் தக்கது. கிளிநொச்சி மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை இருந்தும் குடாநாட்டு மக்களின் குடிநீர்த் தேவைக்காக இரு பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள், விவசாய அமைப்பினர், கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆகியோரின் ஒத்துழைப்பு கிடைப்பதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இரணைமடுக் குளத்து நீரை யாழ்.குடாநாட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு 2002 இல் இருந்து தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபையின் திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன் சாத்திய வள ஆய்வுகளையும் கற்கைகளையும் முன்னிலைப் படுத்தல்களையும் மேற்கொண்டு அபிவிருத்தி செய்கின்றனர். இதற்காக 20 மில்லியன் ரூபா செலவில் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தினை முன்னெடுத்துச செல்ல ஆசிய அபிவிருத்தி வங்கி பிரெஞ் அபிவிருத்தி நிறுவனம், இலங்கை அரசு என்பன நிதிப்பங்களிப்பினை மேற்கொள்ளவுள்ளன.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபையின் திட்டப் பணிப்பாளர் யாழ்.கிளிநொச்சி மாவட்ட திணைக்களத்தலைவர்கள். பிரதேச செயலர்கள் உள்ளூராட்சிச் சபைச்செயல மற்றும் பல உயர் அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# வருடாந்தத் திருவிழா 11ஆம் திகதி ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா நகர் கந்தசுவாமி கோவிலில் 10 நாள் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர்.

திருவிழாக் காலத்தில் தினமும் பகல் அன்னதானம் வழங்கப்படுமென்வும் அறிவிக்கப்பட்டுள்ளது. 10 தினங்களும் காலை 9 மணிக்கு அபிஷேகம் ஆரம்பித்து பூசைகள் நடைபெற்று சுவாமி உள்வீதி வருவதுடன் மாலை 4.00 மணிக்கு சாயரட்ஷைப் பூசை நடைபெறும். 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதிஉலா வருதலும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர். அத்துடன் நிருத்திய நிகேதன கல்லூரி மாணவ, மாணவிகளுடைய நடன நிகழ்சிகளும் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# அளவீடுகள் செய்யப்பட்டும் திருத்தப்பணிகள் இல்லை

(அச்சுவேலி)

கோப்பாய் முதல் யாழ். நகர்ப்பகுதி வரையான யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியினை விஸ்தீரணப்படுத்தி திருத்தியமைப்பதற்கான முதற் கட்டப்பணியாக சீன நிறுவனப் பொறியியலாளர்களினால் அளவீடுகள் மற்றும் கணிப்பீடுகள் மேற்கொள்ளப் பட்டு நீண்ட நாட்களாகியும் திருத்த வேலைகள் எவையும் இதுவரை ஆரம்பிக்கப்படாது காலம் கடத்தப்பட்டுவருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியின் பல பகுதிகள் உள்ளூர் ஒப்பந்த நிறுவனங்களினால் திருத்தியமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் பலபகுதிகளில் அப்பணிகள் திருப்திகரமானதாக அமையவில்லை எனத் தெரிவிக்கும் பலரும் சீனப் பொறியியல் நிறுவனத்தின் பணிகள் சிறப்பானமுறையில் அமையலாம் எனத் தாம் எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவிக்கும் அதே வேளை, இப்பணிகள் வெகு விரைவாகத் தொடங்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகின்றனர். (03)

# விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 04 சந்தேக நபர்களையும் தொடர்ந்து எதிர் வரும்14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி கே. ஜீவராணி வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவரான தர்மலிங்கம் ரமேஸ் என்பவர் கடந்த 24-09-2010 அன்று இரவு 8.40 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் இனம் தெரியாத கும்பலொன்றினால் தாக்கப்பட்ட நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார்ப் பொலிஸா இச்சம்பவம் தொடர்பில் 04 பேரைக் கைது செய்தனர். இந்த நிலையிலேயே குறித்த 04 சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் திருமதி கே. ஜீவராணி முன்னிலையில் ஆஜர்படுத்திய போது தொடர்ந்து 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# கோவில் கூரைபிரித்து பொருட்கள் களவாடல்

(யாழ்ப்பாணம்)

தாவடிப் பிள்ளையார் கோவிலின் கூரையைப் பிரித்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள் ஆலயத்தில் இருந்த பெறுமதியான பொருட்களையும் உண்டியலிலிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்நிலையில் பூஜை நிகழ்த்துவதற்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை ஆலயத்திற்குச் சென்ற ஆலயக் குருக்கள் பொருட்கள் திருட்டுப்போனதைக் கண்டு அப்பகுதி கிராம அலுவலருக்கும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டுள்ளார். இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காசநோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் காசநோயின் தாக்கம் கடந்த ஆண்டில் அதிகரித்துக் காணப்படுவதாக மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டொக்டர் எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

கடந்த வருடம் சுமார் 420 பேருக்கு காசநோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டது.

நோயினால் இனம் காணப்பட்டவர்களுக்கு சளிப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு காசநோய்த் தாக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இங்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் சிலருக்கும் இந்நோயின் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினா. சளியுடன் கூடிய நோய்த் தாக்கம் காணப்பட்டால் உடனடியாக பண்ணையில் அமைந்துள்ள காசநோய்வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்ளவும். (18)

# குடாநாட்டு நெற்பயிர்களில் பச்சை இலைத்தத்தியின் தாக்கம்

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டின் வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களில் நோய்த்தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

"பச்சையிலைத் தத்தி" என்ற நோயினால் பீடிக்கப்பட்டு காணப்படும் இந்த நெற்பயிர்கள் வாடியநிலையில் புள்ளிகள் ஏற்பட்டு காணப்படுகின்றது.

இந்த நெற்பயிர்களை விவசாயிகள் உடனடியாக இனம் கண்டு அவற்றைக் கட்டுப்படுத்த கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயப் பகுதியினர் கேட்டுள்ளனர். (18)



காரை ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியால ஆரம்பபிரிவு பாடசாலையில் இடம்பெற்ற இப் பாடசாலை பழைய மாணவன் ஆசைப்பிள்ளை அரசரத்தினம் எழுதியுள்ள Your Country & your College என்னும் நூல் வெளியீட்டின் போது தீவக கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் முதலாவது நூலினை பாடசாலை அதிபரிடம் இருந்து பெற்றுக் கொள்வதை காணலாம். (50)

## இன்றைய பலன்

(08.01.2011 சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 24 இராகு காலம் 9.32-11.02, சுபநேரம் 3.32-5.02, அவிட்டம் மு.ப 9.54 வரை சதுர்த்தி மு.இ 8.14 வரை சித்தாமிர்தம் சதுர்த்திவிரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

- மேடம்:- உபதேசம் செய்தல், உதவிசெய்தல், பாராட்டுதல்.
- ரிஷபம்:-பொருளால் துன்பம், பணவிரயம். கலகம்.
- மிதுனம் :-பணவரவு, தூரதேச நற்செய்தி, உறவினர்வருகை.
- கடகம்:-வாழ்த்துப்படல், காரிய சித்தி, பொருட்சேர்க்கை.
- சிம்மம்:-பொருள்இழப்பு, அவமதிக்கப்படல், நண்பர் விரோதம்.
- கன்னி :-காரியசித்தி, பொருள் வரவு, போசன சுகம்.
- துலாம் :-மதிப்புயர்வு, தொழிலில் இலாபம், தனச்சேர்க்கை.
- விருச்சிகம்:-நினைத்தகாரியச் சித்தி, நோய்நீக்கம், பொருள்வரவு.
- தனுசு :-பணவரவில் தாமதம், ஏமாற்றப்படல், கோவப்படல்,
- மகரம் :- பாராட்டப்படல், தொழிலால் இலாபம், தேகாரோக்கிய விருத்தி.
- கும்பம் :-தேகாரோக்கியம் பாதிப்பு, பணச்செலவு, காலதாமதம்.
- மீனம்:- பயணத்தடை, காரிய விக்கினம், முரண்பாடு.

# நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் முக்கியமானது என்கிறது ஐ.நா

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர்கள் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. 2011 ஆம் ஆண்டின் முதலாவது ஐக்கிய நாடுகள் சபையின் ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிபுணர்கள் குழுவின் இலங்கை விஜயமானது மிகவும் முக்கியத்துவமான ஒன்று என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்டின் நெஸர்க்கே தெரிவித்தார். நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக செயலாளர் நாயகம் அறிவித்து 18 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இந்த விஜயம் தொடர்பில் உறுதியான தகவல்கள் வெளியிடப்படாமை குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இந்த விஜயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பேச்சுவார்த்தை நடத்தினாரா என்பது தொடர்பில் பதிலளிப்பதற்கு மார்ட்டின் மறுப்புத் தெரிவித்தார்.

# வெளிவாரி கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக அங்கீகாரம் தேவை

(கொழும்பு)

வெளிவாரிப்பட்ட கற்கை நெறிகளுக்கான வகுப்புகளை நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள் தாம் நடத்தும் கற்கை நெறிகளுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் வெளிவாரிக் கற்கை நெறியின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கற்கை நெறிக்கான வகுப்புக்களை நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்களின் விரிவுரை மண்டப வசதி, வளவாளர்கள் தகுதி, மாணவர்களுக்கான அடிப்படை வசதி, நூலக கணினி வசதி மற்றும் பௌதிக வளங்கள் குறித்து ஆய்வு செய்தே பல்கலைக்கழகம் அதற்கான அங்கீகாரத்தை வழங்கவுள்ளது.

# கற்பிட்டியில் கடற்படை முகாம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

புத்தளம் கற்பிட்டிப் பகுதியில் புதிய கடற்படைத் தளம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 1000 வரையிலான குடும்பங்கள் பாதிக்கப்படுவதாக, புத்தளம் மாவட்ட மீன்பிடிச் சங்கத்தினர், மாவட்ட செயலாளருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டிப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்காக 16 கரைவலைப் பிரதேசங்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில், அங்கு புதிய கடற்படை முகாம் ஒன்று நிர்மாணிக்கப்படும் பட்சத்தில், 3 கரைவலைகளில் தொழிலில் ஈடுபட முடியாது போகும் எனக் கூறப்படுகிறது.

இதனால் தாம் அதிக அளவில் பாதிக்கப்படநேரிடும் எனவும், தமக்கு நிவாரணம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குமாறு அவர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

இதேவேளை குறித்த கடற்படை முகாமை, கொடி மரத்துப் பிரதேசத்தில் நிர்மாணிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அங்கு மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால்,அந்தப் பகுதியில் முகாம் அமைக்கும் போது, பாதிப்புகள் ஏற்படாதென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மக்களுக்குத் தேவையான காய்கறிகளை விற்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர்

(கொழும்பு)

மக்களுக்குத் தேவையான காய்கறிகளை விற்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

இராணுவத்தினர் தமது முகாமுக்கு அருகே இருக்கும் பண்ணைகளில் இருந்து நேரடியாகக் காய்கறிகளைக் கொள்முதல் செய்து அதை கொழும்புக்குக் கொண்டு வந்து நேரடியாக மக்களுக்கு விற்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காய்கறிகளை விற்பதற்கான கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுவிட்டது, இராணுவத்தினர் நேரடியாக இதில் ஈடுபடுவார்கள். அமைதிக் காலத்தில் சிவில் நிர்வாகத்துக்கு உதவுவது இராணுவத்தின் கொள்கைகளில் ஒன்று என்பதால் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலரின் ஆலோசனையின படி இராணுவத்தினர் செயற்படவுள்ளனர்.

விவசாயிகள் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதால் அவர்களிடம் இராணுவத்தினர் பேரம் பேசப்போவதில்லை என்றும், இராணுவத்தினர் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்குப் பொருட்களை வாங்க மாட்டார்கள் என்றும் விவசாயிகளிடம் தற்போது இடைத்தரகர்கள் குறைந்த விலையில் வாங்கி அதை அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்து வருகின்றனர், அவ்வாறானவர்களை இராணுவம் அகற்றவுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இராணுவம் நியாயமான விலையைக் கொடுகசும். குறிப்பிட்ட பொருட்களுக்கு அமைச்சகங்கள் விலை நிர்ணயம் செய்திருந்தால் அந்த விலையை இராணுவம் கொடுக்கும்.

முதல் கட்டமாக இந்தத் திட்டத்தைக் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் செயற்படுத்த உள்ளோம். மொத்தமாக 14 கடைகள் திறக்கப்படவுள்ளது. இது நிரந்தரமான திட்டமல்ல. விலையைக் கட்டுக்குள் கொண்டு வரும் வரையிலும், சமூகத்துக்குத் தேவைப்படும் அளவிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்

அத்துடன், இராணுவத்தின் கடைகளில் விற்கப்படும் காய்கறிகள் நிச்சயமாக சந்தை விலையை விடக் குறைவாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யுத்தக் குற்றச் சாட்டு விசாரணைகளை புலிகளிடமே மேற்கொள்ள வேண்டும்

## பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகள் புலிகள் அமைப்புத் தொடர்பில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்வும், இலங்கை அரசாங்கம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகளின் மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

இலங்கையின் உள்விவகாரங்களில் வெளியார் தலையீடு செய்ய அரசாங்கமோ நாட்டு மக்களோ அனுமதிக்கக் கூடாது

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை சந்திப்பதில் தவறில்லை என்ற போதிலும் இலங்கையில் விசாரணைகளை நடத்த அனுமதிக்க முடியாது.

தன்னிச்சையான முறையில் தமது அதிகாரங்களுக்கு அப்பால் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவினை நியமித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகத தீர்மானம் நிறைவேற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்திருந்தது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகளை நடத்துவதற்காக சகல ஜனநாயக உரிமைகளும் இலங்கை அரசாங்கத்திற்குக் காணப்படுகிறது.

நிபுணர்கள் குழு உருவாக்கம் ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு முரணானது.

புலிகளுடனான யுத்தத்தின் போது பொதுமக்கள் இழப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதியாகச் செயற்பட்டார்.

புலிகளே படுகொலைச் சம்பங்களை மேற்கொண்டனர் எனத் தெரிவித்தார்.

## சர்வதேச நிறுவன பிரதிநிதியின் உறவினருடன்

# தகாத முறையில் நடக்க முற்பட்டவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

சர்வதேச நிறுவனம் ஒன்றின் இலங்கைக்கான பிரதிநிதி ஒருவரின் உறவினருடன் தகாத முறையில் நடக்க முயற்சித்த இலங்கையர் ஒருவர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பை அண்மித்த நகரான ராஜகிரியவிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் பிரதிநிதி ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த அவரது உறவினரிடமே குறிப்பிட்ட இலங்கையர் தகாத முறையில் நடக்க முயற்சித்தார் எனக் கூறி வெலிக்கடைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டீ அல்விஸ் முன்னிலையில் ஆஜர்படுத்தியதனையடுத்து சந்தேக நபர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்போது சந்தேக நபரை உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியின் உறவினர் அடையாளம் காட்டியுள்ளார். இதனையடுத்து அவரைப் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# இனவாதத்தை தூண்டும் வகையில் கேள்விகளை எழுப்பக் கூடாது

## அஸ்வருக்கு சபாநாயகர் எச்சரிக்கை

(கொழும்பு)



இனவாதத்தைத் தூண்டும் வகையிலான கேள்விகளை எழுப்பக் கூடாது என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வருக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். நாடாளு மன்றில் கேள்விகளை எழுப்பும் போது பிரயோகிக்கப்படும் மொழி குறித்து கவனம் செலுத்த வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புல்மோட்டைப் பகுதியில் முஸ்லிம் விவசாயிகளின் காணி உரிமைகள் கடந்த 50 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் குற்றம் சுமத்தியிருந்தார். முஸ்லிம் விவசாயிகள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சுக்கள் கவனம் செலுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியிருந்தார். இதேவேளை விவசாயிகளை இன ரீதியாகப் பிரித்து நோக்குவது பிழையானது எனவும், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என பாகுபடுத்தாது விவசாயிகள் எனக் கருதவேண்டு மென ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

# மேன்முறையீடு செய்ய வாய்ப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மேன்முறையீடு செய்வதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஒரு சில இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு மேன்முறையீடு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் மேன்முறையீடு செய்வது தொடர்பில் இதுவரையில் நடைமுறையில் காணப்பட்ட சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடல் மார்க்கமாக நாட்டுக்குள் பிரவேசித்து புகலிடம் கோருவோருக்கு நியாயம் வழங்கும் நோக்கில் இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பாதுகாப்பு அடிப்படையிலான விசாக்களை வழங்குவது குறித்து அவுஸ்ரேலிய அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்ரேலிய உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் இந்தப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

## ஆஷஸ் தொடருடன் கொலிங்வூட் ஓய்வு



(சிட்னி)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான போல் கொலிங்வூட், சிட்னி டெஸ்டுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக் கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

நடப்பு ஆஷஸ் தொடரில் ஆறு இன் சில் வெறும் 83 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தடுமாறியதால் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து அவர் தெரிவித்த தாவது,

எனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் சில குறிப்பிடத்தக்க, மகிழ்ச்சிகரமான உச்சநிலையை அடைந்தது நான் செய்த பாக்கியம். இங்கிலாந்து அணி சில மெச்சத்தக்க சாதனைகளை நிகழ்த்தி இருக்கும் இந்தத் தருணத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டை விட்டு விலகுவது சரியான நேரமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆஷஸ் தொடரை மீண்டும் தக்க வைத்ததை விட திருப்தி வேறு எதுவும் இருக்க முடியாது. இங்கிலாந்து டெஸ்ட் அணியில் திறமை வாய்ந்த இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க இது சரியான நேரமாகும் என்றார்.




### 24 வருடங்களுக்குப் பின்னர்

# ஆஸி மண்ணில் ஆஷஸ் கிண்ணத்தை இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது

(சிட்னி)

சிட்னி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் 24 வருடங்களுக்குப் பின்னர் அவுஸ்ரேலிய மண்ணில் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த மூன்றாம் திகதி சிட்னியில் ஆரம்பமானது. இதில் முதல் ஆடிய அவுஸ்ரேலிய அணி அதன் முதல் இனிங்சிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக ஆடிய இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 644 ஓட்டங்களைப் பெற்றது.


இந்நிலையில், 365 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய அவுஸ்ரேலிய அணி, நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்மித் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சிடில் 43, கிளார்க் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன், ரெமலற் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் சிறப்பாட்டக்காராகவும் குக் தெரிவானார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்ட இங்கிலாந்து அணி, 24 வருடங்களின் பின்னர் அவுஸ்ரேலிய மண்ணில் ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்து 7 விக்கெட்டுக்கு 260



(ஹமில்டன்)

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி அதன் முதல் இனிங்சில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப்பெற்றுள்ளது.

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று ஹமில்டன் மைதானத்தில் ஆரம்பமானது. இதில் நாணயச் சுழற்சியில் பெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஏழு விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சௌத்தி 56, வில்லியன்சன் 44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். மற்றும் மக்குலம் 56, குப்ரில் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரஹ்மான் மூன்று, தன்வீர் அகமட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## சமநிலையில் நிறைவு

(கேப்டவுன்)



கேப்டவுன் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவுற்றது. இதன் மூலம் இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது.

கேப்டவுனில் நிறைவடைந்த இந்தப் போட்டியில், இறுதி நாளில் 340 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் கலிஸ் தெரிவானார்

## தென்னாபிரிக்க மண்ணில் தொடர் சமன் செய்தது மகிழ்ச்சி



கேப்டவுன்)

முதல் முறையாக தென்னாபிரிக்க மண்ணில் தொடரைச் சமன் செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்காவை 250 அல்லது 260 ரன்களுக்குள் கட்டுப்படுத்தி இருந்தால் நாங்கள் அந்த இலக்கை விரட்டி வெற்றி பெற்றிருப்போம். அது முடியாததால் தான் சமநிலையில் முடிய முயற்சித்தோம். எங்கள் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசினார்கள். ஆனாலும் கடைசி நேரத்தில் விக்கெட்டுகளை வீழ்த்த முடியாமல் போய்விட்டது.

கலிஸ் நிலைத்து நின்று ஆடி அதிக ஓட்டங்கள் குவித்து விட்டார். அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இந்தத் தொடர் உண்மையிலேயே நல்ல ருசிகரமான போட்டியாக அமைந்திருந்தது. தொடக்கத்தில் இருந்து முடியும்வரை பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது.

முதல் போட்டியில் நாங்கள் சரியாக ஆடவில்லை. ஆனால் 2ஆவது டெஸ்டில் எங்கள் துடுப்பாட்ட வீரர்களும், பந்து வீச்சாளர்களும் சிறப்பாகச் செயற்பட்டனர். அதிலும் இந்த டெஸ்டில் கடைசியாகக் கிடைத்த விக்கெட்டுகள் ஆட்டத்தையே மாற்றி எங்களை வெற்றி பெறச் செய்தது. ஹர்பஜன்சிங் மிகக் சிறப்பாகச் செயற்பட்டார் என்றார்.

## ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி




(ஒக்லாண்ட்)

நியூசிலாந்தின் ஒக்லாந்தில் ஏ.எஸ்.பி. கிளாசிக் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான போட்டித் தரநிலையில் முதலிடம் வகித்த ரஷ்யாவின் மரிய ஷரபோவா கால்இறுதியில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

அவரை ஹங்கேரியின் கிரேடா ஆர்ன் 6-2, 7-5 என்ற நேர் செட்டில் தோற்கடித்தார்.

## தென்னாபிரிக்க அணி குடும்பம் போன்றது



(கேப்டவுன்)

எங்கள் அணி ஓர் குடும்பம் மாதிரி. எல்லோரும் அர்ப்பணிப்போடு ஆடுவோம் எனக் கலிஸ் தெரிவித்தார்.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரின், ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதைப் பெற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கலிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, காயத்தினால் எனக்குக் கடுமையான வலி இருந்தது. ஆனாலும் அதை நான் பொருட்படுத்தவில்லை. வலியைத் தாங்கிக் கொண்டு ஆடித்தான் ஓட்டங்களைக் குவித்தேன். எங்கள் அணி ஒரு குடும்பம் மாதிரி. எல்லோருமே அர்ப்பணிப்போடு ஆடுவோம். அதனால் தான் நானும் உடல் நலனைப் பொருட்படுத்தாமல் ஆடினேன். எங்கள் அணியில் வேறு வீரர்கள் இதே நிலையில் இருந்தாலும் இப்படித் தான் ஆடுவார்கள்.

## அணியின் அரண் கலிஸ்தான்



(கேப்டவுன்)

எங்கள் அணியின் அரணாக கலிஸ் இருந்தார். காயம் ஏற்பட்ட நிலையிலும் அவர் சிறப்பாக ஆடி எங்கள் அணியைக் காப்பாற்றியிருக்கின்றார் என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தத் தொடரின் முடிவு இரு அணிகளுமே சிறந்த அணி என்பதைக் காட்டுகிறது. நாங்கள் இரு அணிகளும் கடந்த இரண்டு வருடத்தில் மூன்று டெஸ்ட் போட்டிகள் ஆடி இருக்கிறோம். மூன்று போட்டிகளிலும் 1-1 என்ற கணக்கில் தொடரை சமன் செய்து உள்ளோம். இதன் மூலம் இரு அணிகளும் சம பலத்துடன் உள்ளதையே காட்டுகிறது. எங்கள் வீரர் கலிஸ் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் இருவரும் சிறப்பாக ஆடினார்கள். கலிஸ் ஆட்டம் எங்களை மிகவும் கவர்ந்தது. அவர் அணிக்கு அரணாக இருந்தார். அவர் காயம் ஏற்பட்டிருந்த நிலையிலும் சிறப்பாக ஆடியது பாராட்ட வேண்டிய விடயம்.இரண்டாவது இன்னிங்சில் எங்கள் அணி இக்கட்டான நிலையில் இருந்த போது கலிஸ் அதிக ரன் குவித்துக் காப்பாற்றி விட்டார் என்றார்.

## டெஸ்ட் தரப்படுத்தல்

(டுபாய்)

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையில் நிறைவடைந்த கேப்டவுன் டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்ட டெஸ்ட் தரப்படுத்தலில் இந்திய அணி முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையால் நேற்று வெளியிடப்பட்ட அணிகளின் தரப்படுத்தல் விபரங்கள் வருமாறு:

இந்தியா 128, தென்னாபிரிக்கா 117, இங்கிலாந்து 112, அவுஸ்ரேலியா 110, இலங்கை 109 புள்ளிகளைப் பெற்று முறையே, முதலாம், இரண்டாம், மூன்றாம் நான்காம், ஐந்தாம் இடங்களில் உள்ளன.

## கிரிக்கெட் சபைக்கு சங்கக்கார கடிதம்



(கொழும்பு)

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் முதல் மூன்று ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடிய இலங்கைத் தலைவர் சங்கக்காரா, பஞ்சாப் அணி நிர்வாகம் சம்பள நிலுவை வைத்திருப்பதாகவும், அதனை வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் இந்திய கிரிக்கெட் சபைக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பஞ்சாப் அணியில் ஆடிய அவுஸ்ரேலியாவின் ஹான் மார்சும் இதே போன்ற கடிதம் எழுதியுள்ளார். அதே சமயம் வீரர்களுக்கு அனைத்து நிலுவைத் தொகையும் வழங்கப்பட்டுவிட்டதாக பஞ்சாப் அணியின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# தீயில் உயிரிழந்த உறவினர்களின் எதிர்ப்பால் பேச்சை பாதியில் நிறுத்திய இஸ்ரேல் பிரதமர்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் கடந்த மாதம் நேரிட்ட காட்டுத் தீயில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில், அவர்களது உறவினர்கள் எதிர்ப்புக் கோஷமிட்டதால், அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தனது பேச்சை பாதியிலேயே நிறுத்த வேண்டியநிலை ஏற்பட்டது.

இஸ்ரேலின் வடக்கே உள்ள ஸ்வாத்ஸ் காட்டுப் பகுதியில் கடந்த மாதம் தீப்பிடித்தது. மரங்களும், செடிகளும் பற்றி எரிந்ததில் வானுயரத்துக்கு தீப்பிழம்பு ஏற்பட்டது. இந்தக் காட்டுத் தீயில் 42 பேர் உயிரிழந்தனர்.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த உரிய தீயணைப்பு விமானங்கள் இஸ்ரேலிடம் இல்லாததால், உலக நாடுகளின் உதவியை அது நாடியது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தீயணைப்பு விமானங்களை இஸ்ரேலுக்கு அனுப்பிவைத்தன. இதையடுத்து, நான்கு நாள் போராட்டத்துக்குப் பிறகு காட்டுத் தீ அணைந்தது.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான நிகழ்ச்சி ஜெருசலேமில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவும், உள்துறை அமைச்சர் எலயிசாயும் கலந்து கொண்டனர்.



இந்தக் காட்டுத்தீயைக் கட்டுக்குள் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுக்காததால் தான் 42 பேர் உயிரிழக்க நேரிட்டதாகவும், இதற்கு பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவும், உள்துறை அமைச்சர் எலியிசாயுமே காரணம் என்றும் அவர்களது உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் எதிராக அவர்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். பிரதமர் பதவியிலிருந்து நெத்தன்யாகு விலக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து, நெத்தன்யாகு தனது பேச்சை பாதியிலேயே நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. படையினர் தலையிட்டு அமைதியை ஏற்படுத்திய பிறகே நிலைமை கட்டுக்குள் வந்தது.

## அமெரிக்கப் பெண் உளவாளி ஈரானில் அதிகாரிகளால் கைது

(தெஹ்ரான்)

அமெரிக்க பெண் உளவாளி ஈரானில் உளவு வேலையில் ஈடுபட்டவேளை கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து உளவு சாதனங்களும் கைப்பற்றப் பட்டன. அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஹல் தலாயான் (58). இவர் ஈரானில் உள்ள நூர்டோஷ் நகரில் சந்தேகப் படும் நிலையில் சுற்றித் திரிந்தார். அவரைச் சுங்க இலாகா அதிகாரிகள் சோதனை செய்தபோது அவரிடம் விசா எதுவும் இல்லை. உடனே அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் அவர் ஒரு அமெரிக்க உளவாளி என்று தெரியவந்தது. மேலும், ஆர்மீனியாவிலிருந்து ஈரானுக்குள் ஊடுருவி அங்கு உளவு பார்க்க வந்த தாக அவர் கூறினார். எனவே அவரை ஈரான் சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்தனர். அவரிடமிருந்து உளவு பார்க்கப் பயன்படுத்தப்படும் அதிநவீன சாதனங்கள் சிக்கின. அவற்றை அவர் தனது பற்களில் பொருத்தியிருந்தார். சமீப காலமாக உளவுபார்க்க அமெரிக்காவிலிருந்து பலர் ஈரானுக்குள் ஊடுருவி வருகின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 உளவாளிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஈராக்கில் உள்ள குர்திஸ்தான் பகுதிக்கு சுறறுலா பயணிகள் போன்று வந்து ஈரானுக்குள் ஊடுருவ முயன்றனர். தற்போது பிடிபட்டுள்ள ஹல்தலாயானை சேர்த்து அமெரிக்க உளவாளிகள் 4 பேர் சிக்கியுள்ளனர்.

## ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 17 பேர் பலியாகினர், 23 பேர் காயம்

(கந்தகார்)

ஆப்பானின் தென்பகுதி மாகாணமான கந்தகாரில் பொதுமக்கள் நடமாடும் சனநெரிசல் மிக்க பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைத தாக்குதலில் குறைந்தது 17 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 23 பேர் காயமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் இடம்பெற்ற பகுதி பாகிஸ்தானின் எல்லைப் பிரதேசமாகும். உள்ளூர் பொலிஸ் அதிகாரியான ரம்ஷானி வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் பள்ளிவாசல் தொழுகைக்காக இந்த வீதியையே பயன்படுத்துவதாகவும், அவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் உள்ளூர் புலனாய்வு அதிகாரி ஒருவர் பி. பி. சியிடம் தெரிவித்தார்.

தற்கொலையாளி தனது மார்பில் குண்டைப் பொருத்தி வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த வருடம் தொடக்கத்தில் ஆப்கானில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதல்களை, ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

# அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலைகளை பாகிஸ்தான் அரசாங்கம் குறைக்கக்கூடாது

## அமெரிக்கா எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அதிகரிக்கப்பட்ட எரிபொருட்களின் விலைகளை, அந்நாட்டு அரசாங்கம் குறைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை அமெரிக்காவும், சர்வதேசநாணய நிதியமும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக, அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதுவரை அழைத்த வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், பாகிஸ்தான் அரசின் இந்த விலை குறைப்பு முயற்சியானது தவறான ஒரு நடவடிக்கையாகும் எனத் தெரிவித்தார். பாகிஸ்தான்அரசின் இந்தச் செயலானது அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும். இந்த விடயம் தொடர்பாக நாம் மிகுந்த விழிப்பாக இருப்போம் எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து அந்த நாட்டின் கூட்டணிக் கட்சிகளில் ஒன்று அரசின் ஆதரவை விலக்கியிருந்தது. இதனால் பாகிஸ்தான் அரசாங்கம் சிறுபான்மைக்குத் தள்ளப்பட்டது. இந்த நிலையில் அதிகரித்த எரிபொருள் விலைகளை மீண்டும் குறைப்பதன் மூலம் அரசு எதிர்நோக்கும் நெருக்கடியைக் குறைக்கலாமென பாகிஸ்தான் அரசு கருதியது.

எனினும் அமெரிக்க மற்றும் சர்வதேச நாணய நிதியம் விடுத்த எச்சரிக்கையினால் பாகிஸ்தானிய அரசு உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் பெரும் நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கிறது.

## உள்ளதைச் சொல்றேனுங்கோ...

போன ஞாயிற்றுக்கிழமைப் பேப்பரில ஒரு செய்தியைப் படிச்ச நேரம் தொடக்கம் மனசில குழப்பமும் வேதனையுமாக்கிடக்குது.

கடந்த ஆண்டில 94 ஊடகவியலாளர்கள் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கினமாம். பேப்பரைப் பாத்தனிங்களே?

உண்மை நிலைபரத்தை ஊர்மக்களுக்கு எடுத்துச் சொல்லுற ஊடகவியலாளனுக்குக் கடைசியில நாடு குடுக்கிற நல்ல மதிப்பும், கௌரவமும் உதுதான்.

உண்மையை எழுதிப்போட்டாங்கள்... எண்டதுக்காக எழுதுற ஒவ்வொருத்தனையும் 'போட்டுத்தள்ளி'க் கொண்டிருந்தாலும், உண்மையானது இதுவரைக்கும் சாகேல்லையெண்டதுதான் உண்மையிலும் உண்மை!

"யதார்த்தவாதி வெகுசன விரோதி" எண்டதுமாதிரி உண்மையை எழுதுற ஒரு ஊடகவியலாளனுக்கு நண்பர்கள் உண்மையாக உளநேசிப்போடு அமையுறதும் மிகக் குறைவு.

எந்தவொரு அரசியல்வாதியோ அல்லது அராஜகவாதியோ நீதிக்குப் புறம்பான, ஒரு சமூகவிரோத காரியங்களில ஈடுபடுகிற ஆட்களோ ஆரெண்டாலும், எவையெண்டாலும் 'ஊடகவியலாளன்' எண்டதும் அவங்கட நெஞ்சுக்குள்ள படக்குப் படக்கெண்டு அடிக்கத் தொடங்கியிடும்.

ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளுறேல்லை. வெளிக்காட்டினா தங்கட இருப்புக்கு வெக்கக்கேடு... எண்டுதான் ஆட்களை வைச்சு அடிக்கிற: முடிக்கிற வேலையளைச் செய்யினம்.

உண்மையாய் எழுதுற ஒரு ஊடகவியலாளனின்ர உயிரைச் சரிக்கட்டினால், அவன் சரித்திரம் அதோடை முடிஞ்சு போயிடும்... எண்டுதான் நினைக்கினம். ஆனால், அதுக்குப் பிறகு நடக்கிறதானது நேர்மாறான நிகழ்வுகள் எண்டது பலபேருக்குப் புரியுறதில்லை. ஒருத்தன் போனால் அதேமாதிரி எழுதுற துக்கு அந்த இடத்தில ஒன்பது பேர் குந்துவாங்கள் கண்டி யளே!

ஆரம்பத்தில ஒரு உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டினதுக்காக ஊடகவியலாளன் ஒருத்தனைச் சுட்டுச் சாக்காட்டிச்சினம். அதோடை எல்லாம் முடிஞ்சே போச்சுது? அதைப் பார்த்த இன்னொருவன் செத்தவன்ர இடத்தில வந்து குந்தினான். உண்மையளை எழுதினான். எழுத்தில முகமூடியளை உரிச்சுக் காட்டினான். அவனையும் இழுத்துக்கொண்டு போய் சுட்டினம். அவன்போக.... அவன்ர இடத்தில இன்னொருவன்....

வேதாளம் முருக்க மரத்தில ஏறின கதை மாதிரி போட்டுத் தள்ளத்தள்ள.... புதுசுபுதுசா ஒவ்வொருவனும் வர..... இப்படியே போன வருசம் மட்டும் பாருங்கோ 94 ஊடகவியலாளர்களை சுட்டுத்தள்ளியிருக்கினம். இவ்வளவு பேரையும் சுட்டுத்தள்ளியும் உண்மையெண்டது பயத்தில சுருண்டே படுத்துக்கிடக்குது.?

அது ஏதோ ஒரு வடிவத்தில.... எவனோ ஒரு ஊடகவியலாளின் எழுதுகோலாலை வெளிவந்துதான் ஆகுமுங்கோ.

உதைத்தான் நம்ம நாட்டுப் படைப்பாளி ஒருவர் **"உண்மைகள் உறங்கிப் போவதில்லை. அது சில சமயம் ஊமையாகி விடுகிறது. அதற்காக உண்மை செத்து விட்டதென்று அர்த்தமில்லை..."** எண்டு தன்ர நாவலில சொல்ல வாறார்.

ஏன்! கனக்கவேண்டாம்.... இப்ப ரண்டொரு மாசத்துக்கு முன்னம் 'விக்கிலீக்ஸ்' எண்ட இணையத்தள ஊடகத்துக்குள்ளால வெளியில கொட்டுப்பட்ட உண்மையள் எக்கச்சக்கமாகக் கிடந்தது பார்த்தியளே!.

இதில எங்கட நாடு தொடக்கம் எல்லா நாடுகளில நடந்த அரசியல் அசிங்கங்களை, அக்கிரமங்களின் முகங்களை அப்படியே தோலுரிச்சுக்காட்டி, அவையளை ஓடஓடத் துரத்திக்கொண்டிருக்குது பாருங்கோ.

பூதம் ஒண்டு புதையலைக் காத்தமாதிரி, எல்லாப் பொட்டுக்கேட்டு ரகசியங்களைப் பொத்திப் பொத்திக் காத்து வைச்சிருந்திட்டு, பொட்டு வாணம் பொசுக்கெண்டு சீறி வெடிச்ச மாதிரி...விக்கிலீக்ஸ் ஊடகக்காரன் ஜூலியன் அசாஞ்சே, ஒட்டுமொத்தமான அசிங்கங்களையும் அந்தரங்கங்களையும் அவிட்டுக் கொட்டினதில ஆடிப்போயிருக்கினம் அணுகுண்டுகளும், வெடிகுண்டுகளும்.

சும்மா சொல்லக்கூடாது! உந்தாள் ஒரு துணிச்சலான, விறைப்பான ஒரு துவரங்கட்டை தான். பேனையளை மாலையாக்கட்டி அந்தாளுக்குப் போட்டுப் பெருமைப்பட வேணும்.

ஆனால், இப்ப என்ன பிரச்சினையெண்டால் உண்மைகளை எழுதிப் பகிரங்கப்படுத்தினதுக்காக, 'போட்டுத்தள்ளுற ஆட்கள்' உவரையும் விட்டு வைப்பினமோண்டது சந்தேகம் தான்.

உண்மையை வெளியில கொண்டுவாற ஊடகவியலாளனை ஒழிக்கிறதெண்டது லேசான விடயம் எண்டாலும், அந்த ஒழிப்பில இருந்து உருவாகிறது ஓராயிரம் பாருங்கோ!...

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தமிழக அரசு வலியுறுத்து



(சென்னை)

தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவும், இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைந்திடவும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, தமிழக அரசு வலியுறுத்தி யுள்ளது.

தமிழக 13 ஆவது சட்டப் பேரவையின் 15 ஆவது கூட்டத் தொடர்க் கூட்டம் நேற்று புதிய சட்டசபை தலைமைச் செயலக வளாகத்தில் தொடங்கியது.

2011 ஆம் வருடத்தின் முதல் கூட்டத்தொடர் எனபதால் முதல் நாள் கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றினார்.

ஆளுநர் தனதுரையில் கூறியதாவது -

சிந்திய கண்ணீரும், செத்து மடிந்த உயிர்களும் போதாது என்று இன்னமும் ஆயிரக் கணக்கான தமிழர்கள் இலங் கையில் முள்வேலி முகாம்க ளில் தங்க வைக்கப்படடி ருப்பதும், முகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு அனுப் பப்பட்ட தமிழர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் முழுமை அடையாமல் இருப்பதும் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் அரசியல் தீர்வுக்கான ஆரம்பகட்ட முயற்சிகள்கூட இதுவரை மேற்கொள்ளப்படாமலிருப்ப தும், தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப் படுவதும் தமிழக அரசுக்கு மிகுந்த கவலையை அளிக்கி றது.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவும், இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை களைந்திடவும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்துகிறது என ஆளுநர் தமதுரையில் தெரிவித்தார்.




# கறுப்புச்சட்டையில் வந்த தமிழக எதிர்க்கட்சிகள்



தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டின் முதல் சட்டப்பேர வைக் கூட்டம் நேற்றுத் தொடங் கியது. கூட்டத் தொடரின் முதல் நாளில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா உரை நிகழ்த்தினார்.

இந்நிலையில் விலை வாசி உயர்வு, மின்வெட்டு உள்ளிட்ட பிற பிரச்சினைகளை முன்னிறுத்தியும் மாநில அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அ.தி.மு.க உறுப்பினர்கள் கருப்பு சட்டை அணிந்து வந்தனர்.

அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் சிலர் காய்கறி மாலை அணிந்து வந்தனர். ம.தி.மு.க, கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ., க்கள் கருப்புச் சால்வை அணிந்து வந்தனர். பின்னர் ஆளுநர் உரையின்போது குறுக்கிட்டு அ.தி.மு.க கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். அமளியில் ஈடுபட்ட உறுப்பினர்கள் சட்டசபையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

# அடுத்த தலைமுறை தொழிலாளர்களை இந்தியா எதிர்நோக்கிக் காத்திருக்கின்றது

(சென்னை)


அடுத்த தலைமுறை தொழில முனைவோரை இந்தியா எதிர் நோக்கியுள்ளது என, முன் னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்தார்.

சென்னை கிரேட் லேக்ஸ் மேலாண்மை நிறுவனத்தின் ஆண்டு விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்,

இந்தியா இயற்கை வளத்தை மட்டும் அல்லாமல் மிகப் பெரிய மனித வளத்தையும் பெற்றுள் ளது, ஒவ்வொரு ஆண்டும் இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகளை முடித்துவிட்டு 30 லட்சம் பேர் கல்லூரிகள் மற் றும் பல்கலைக்கழகங்களி லிருந்து வெளி வருகின்றனர்.

10 ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 முடித்துவிட்டு வேலை தேடுவோர் 70 லட்சம் பேர். இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஒரு கோடி மாண வர்கள் வேலை தேடுகின்றனர். இருந்தபோதும் போதிய திறன் பெற்ற பணியாளர் கிடைப்பது தொடர்ந்து மிகப் பெரிய சவா லாக உள்ளது.

இந்த இடைவெளியைப் போக்க கல்வி முறையில் மாற் றம் கொண்டுவர வேண்டும். கலந்துரையாடல் முறையில் சுயமாகக் கற்றுக் கொள்ளுதல், சிந்திக்கும் திறனை ஊக்குவிக் கும் வகையிலும் கல்விமுறை மாற்றப்பட வேண்டும். அப்போது தான் படித்து முடித்து வெளி வரும் இளைஞர்களை வேலை தேடுபவர்களாக அல்லாமல், வேலை கொடுப்பவர்களாக



மாற்ற முடியும்.

பொருளாதார வளர்ச்சிபெற அடுத்த தலைமுறை தொழில் முனைவோரை இந்தியா எதிர் நோக்கி உள்ளது.

தகுதி, திறன், உயர் தொழில் நுட்பப் பொருட்கள் மற்றும் சேவைகள் மூலம் அடுத்த தலைமுறை தொழில் முனை வோரை நாம் அடையாளம் காண முடியும்.

தரம், நியாயமான விலை மற்றும் நிலைத்த பொருளாதார வளரச்சிக்கு இவர்களே காரண மாகத் திகழ்வர். நேர்மையான லாபம்தான் நிலைத்த வளர்ச் சியைக் கொடுக்கும் என்றார்.

# இளைஞர்களை நம்பி பா.ம.க என்கிறார் டொக்டர் ராமதாஸ்


மயிலம் சட்டசபைத் தொகுதி பா.ம.ப. கிளை நிர்வாகிகள் ரெட்டணையில் நடத்தியபோது அக்கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் ப ா.ம.க., இன்றைக்கு இளைஞர்களையும், இளம்பெண்களை அதிகமாக நம்பியுள்ளது. எனவே தமிழகம் முழுவதும் இளைஞர், இளம்பெண்கள் பயிற்சிக் கூட்டங்கள் நடந்து வருகிறது. மயிலம் சட்டசபை தொகுதியில் பா.ம.க.,விற்கு 269 கிளைகள் உள்ளன.

இதில் 60 கிளைகள் தலித் சமுதாய மக்க ளின் கிளைகளாகும். நமது நாட்டில் 500க்கும் மேற்பட்ட ஜாதிகள் உள்ளன. இதில் வன்னியர்கள் மட்டும் தமிழகத்தில் 2.5 கோடி பேர் உள்ளனர். இது வரையில் வன்னியர்கள் முதல்வர்களாக வர முடியவில்லை. வரும் சட்டசபைத் தேர்தலில் மாற்றுக் கட்சியினர் ஒரு ஓட்டுக்கு ஆயிரம், இரண்டாயிரம் ரூபா கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு மாம்பழம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

தினமும் நிர்வாகிகள் ஒன்றுகூடி அரசியல் நிலை, கட்சி வளர்ச்சிப் பணிகள், கிராமத்தின் வளர்ச்சி பற்றி ஆலோசிக்க வேண்டும். வரும் சட்டசபைத் தேர்தலில் பா.ம.க., ஆதரவில்லாமல் யாரும் ஆட்சிக்கு வர முடியாது.

வரும் பொங்கலுக்குப் பிறகு தான் பா.ம.க., எந்த கட்சியுடன் கூட்டணி என்பது தெரியும். பா.ம.க., உள்ள கூட்டணி தான் அதிக இடங்களை வெற்றிபெற்று ஆட்சியை பிடிக்கும் என்றார்.

# தெலுங்கானா எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பதவி விலகவேண்டுமெனக் கோரிக்கை



தனி மாநிலம் கோரி தெலுங் கானாவைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி., எம்.எல்.ஏ.க்களும் பதவியை ராஜி னாமாச் செய்ய வேண்டும் என, தெலுங் கானா ராஷ்ரீய ச.மி.தி கட்சி தலைவர் சந்திரசேகர ராவ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது,

தெலுங்கானா தனி மாநிலம் தர வேண்டும் என்பது தான் எங்களது நீண்ட நாள் கோரிக்கை. இதில் இருந்து நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம். கிருஷ்ணா கமிட்டி போன்ற அறிக் கையை நான் இது வரை பார்த்ததில்லை.



எதற்கும் பயன்படாத, தெளிவில்லாத அறிக்கை. அதில் தெலுங்கானா அமைக்கலாமா? வேண் டாமா? என்பதற்கு பதில் இல்லை. 6 பரிந்துரைகளை வெளியிட்டு மேலும் குழப்பம் விளைவிக்க முயற்சி நடக்கிறது.

தனி மாநிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை வீண்போய் விட்டது. தனி மாநிலம் கோரி, தெலுங்கானாவைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி. எம்.எல்.ஏ.க்களும் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும்.

இதன் மூலம் மத்திய மாநில அரசுகளுக்கு நெருக்கடி கொடுக்கலாம். நான் முன்பே கூறியது போல் இனி வரும் நாட்களில் எங்களது போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். அரசு அலுவலகங்களை இயங்க விடாமல் முடக்கிவிடுவோம் என்றார்.

இதேவேளை, சிறிகிருஷ்ணா குழுவின் பரிந்துரைகளை எதிர்த்து ஆந்திராவில் பஸ் எரிப்பு, கல்வீச்சுப் போன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

# தனித் தெலுங்கானா மாநில அமைப்பு சிறிகிருஷ்ணா குழுவால் 6 பரிந்துரைகள்

(புதுடெல்கி)

தனி தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பாக சிறி கிருஷ்ணா குழு தனது அறிக் கையை கடந்த 30 ஆம் திகதி மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம் பரம், ஆந்திராவில் அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

சிறிகிருஷ்ணா குழு அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் 6 பரிந்துரைகள் உள்ளன. ஆனால் இதில் எந்தப் பரிந்து ரையை நிறைவேற்ற வேண்டும் என்று சிறிகிருஷ்ணா குழு வலி யுறுத்தவில்லை.

அதில், ஒருங்கிணைந்த ஆந திராவே நீடிக்கலாம். அப்படி நீடிக்கும்போது தெலுங்கானா வைச் சேர்ந்தவரை முதலமைச் சர் அல்லது துணை முதல மைச்சராக்க வேண்டும்.

தெலுங்கானா பகுதியை தனி மாநிலமாகவும், ஆந்திரா மற்றும் ராயலசீமாவை சீமாந் திரா என தனி மாநிலமாகவும் அறிவிக்கலாம். அவ்வாறு இரு மாநிலமாகும்போது, ஐதரா பாத்தை யூனியன் பிரதேசமாக்க வேண்டும்.

தெலுங்கானாவையும், ராயல சீமாவையும் சேர்த்து ராயல தெலுங்கானாவாகவும், கட லோர ஆந்திராவைத் தனியாகவும் உருவாக்கலாம். அப்போது ஐத ராபாத் ராயல தெலுங்கானா வுடன் இருக்கும்.

தெலுங்கானாவைத் தனியா கவும், ராயல சீமா மற்றும் கடலோரப் பகுதிகளை சீமாந்தி ராவாகப் பிரிக்கலாம். எஞ்சி யுள்ள பகுதிகளை ஐதராபாத் துடன் சேர்த்து, கடலோர ஆந் திராவுடன் தொடர்பு இருக்கும் வரையில் விரிவாக்கப்பட்ட யூனியன் பிரதேசமாக்கலாம்.

தற்போதுள்ள எல்லைகளின் அடிப்படையில் சீமாந்திராவை யும், தெலுங்கானாவையும் பிரித்துவிட்டு, ஐதராபாத்தை தெலுங்கானாவின் தலைநக ராக்கலாம்.

ஒருங்கிணைந்த ஆந்திராவே தொடரலாம். எனினும் தெலுங் கானாவின் சமூக, பொருளா தார அரசியல் வளர்ச்சிக்கு மண்டல குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

இவை அனைத்தும் யோச னைகள்தான். இதன் அடிப் படையில் மத்திய அரசு இறுதி முடிவு எடுக்கலாம் என, சிறிகிருஷ்ணா குழு தெரிவித் துள்ளது.

# இஸ்ரேலிய விவசாய அமைச்சரின் இலங்கைக்கான விஜயம் ரத்தானது

(டெல் அவிவ்)

உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரவிருந்த இஸ்ரேலிய விவசாய அமைச்சர் சலோம் சிம்ஹொான் தனது விஜயத்தை இரத்துச் செய்துள்ளார்.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சுப் பணியாளர்கள், சம்பள உயர்வு கோரி நடத்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தை அடுத்தே அமைச்சர் தனது இலங்கைக்கான விஜயத்தைக் கைவிட்டுள்ளாரென "ஜெருசலம் போஸ்ட்" என்ற பத்திரிகை தெரிவித்தது.

இஸ்ரேலிய விவசாய அமைசசுடன் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட இருந்தது. இதன் காரணமாகவே இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள இருந்தார்.



உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளும் தமக்கிடையில் விவசாய விஞ்ஞானம் மற்றும் விவசாய தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பன்றிக்காய்ச்சல் பரவும் வேகம் குறைவடைந்து செல்கின்றது

(நமது நிருபர்)

தற்போது நாட்டில் பனறிக் காய்ச்சல் நோய் பரவும் வேகம் குறைந்துள்ளதாகவும், அதனால் தடுப்பூசி வழங்கும் திட்டத்தைத் தொடரவேண்டிய அவசியம் இல்லை எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

ஜே . வி. பி உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏ. எச் I என் I வைரஸ் தொற்று ஏற்படுவதைக் கட்டுப்படுத்த அரசு சகல விதமான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் அதனால் தற்போது நோய் பரவும் வேகம் குறைந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து இந்நோய்க்குத் தேவையான மருந்துகளைப் பெற்றக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கடந்த 2009 ஆம் ஆணடு நவம்பர் மற்றம் டிசம்பர் மாதங்களோடு ஒப்பிடும் போது சுகாதாரத்துறையில் முன்னேற்றங்களை அவதானிக்க முடிகிறது.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த 2010 ஆம் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களில் டெங்கு நோயாளர்கள் டெங்கு நோயினால் மரணிப்போரின் எண்ணிக்கைகள் 99 சதவீதத்தினால் குறைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினர்.

## கப்பலில் வந்த முட்டைகள் ச.தொ.ச. நிலையங்களுக்கு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள முட்டைகளுக்கான தட்டுப்பாட்டை அடுத்து இந்தியாவிலிருந்து இறக்குமதி' செய்யப்பட்ட முட்டைகள் நாடெங்கிலுமுள்ள ச. தொ. ச விற்பனை நிலையங்களூடாக விற்பனை செய்வதற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முதலாவது கப்பலில் வந்த முட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டாவது கப்பலில் நான்கு மில்லியன் முட்டைகள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், முட்டையின் விலை 12 ரூபாவாக வரும் வரை இறக்குமதி தொடர்ந்து இடம்பெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முட்டைகளை ஏற்றிய மூன்றாவது கப்பலும், இன்று வந்தடையுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## விண்ணப்பம் கோரல்

வரவேற்புக் கருமபீட அலுவலர் பதவி வகுப்பு II

இறைவரித்திணைக்களத்தில் வரவேற்பு உள்நாட்டுக் கருமபீட அலுவலர் பதவி வகுப்பு II க்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணபப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 2011. 01. 20 ஆம் திகதியாகும். தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கொழும்பு 02, சேர். சிற்றம்பலம் ஓ கார்டினர் மாவத்தை த. பெ. இல 515ல் அமைந் துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு முகவரியிட்டு 2011. 01. 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும், உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கல்வித்தகைமை, மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் என்பனவற்றை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்)

# அழகியல் பட்டதாரிகள் 3174 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்

## பிரதிக்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கக் கல்வி அமைச்சு திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு அமைய 3, 174 அழகியல் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று பிரதிக் கல்வி அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்சா கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிங்களம் மற்றும் தமிழ் மூலம் பாடசாலைகளில் நிலவும் அழகியல் கல்வி ஆசிரியர் வெற்றிடங்கள் இந்நியமனங்கள் மூலம் நிரப்பப்படும் என அவர் தெரிவித்தார். கீழைத்தேச சங்கீதம். நடனம், சித்திரம், நாடகம், மற்றும் மேற்கிந்திய சங்கீதம் ஆகிய பாடங்களுக்கே அழகியல் பட்டதாரிகள் நியமிக்கப் படுவர்.

சிங்கள மொழி மூலம் பாடசாலைகளுக்கு 1,939 அழகியல் ஆசிரியர்களும் மற்றும் தமிழ் மொழி மூலம் பாடசாலைகளுக்கு 1, 235 அழகியல் ஆசிரியர்களும் நியமிக்கப் படுவர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

முதல் சுற்று நேர்முகத் தேர்வு கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி நடத்தப்பட்டது அதற்கு 710 பேர் அழைக்கப் பட்டனர். ஆனால், 691 பேரே நேர்முகத் தேர்வுக்குத் தோற்றினர்.

நியமனங்கள் வழங்குவதற்கு அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்

## விரிவுரைக் கட்டணத்தை உயர்த்தக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விரிவுரைக் கட்டணத்தை உயர்த்துமாறு சட்டக் கல்விச்சபை நீதியமைச்சைக் கேட்டுள்ளது.

தற்பொழுது விரிவுரைக் கட்டணமாக மாதமொன்றிற்கு 325 ரூபா வசூலிக்கப்படுகின்றது. இது போதாதென்று சட்டக் கல்விச்சபை கோரிக்கை விடுத்ததை அடுத்து நீதியமைச்சு அக்கோரிக்கையை ஏற்றுள்ளது. சட்டக்கல்விச் சபையின் கோரிக்கையை நாடாளுமன்றுக்குச் சமர்ப்பித்த அமைச்சு நிதியுதவி தேவையான மாணவர்களுக்கு உதவி வழங்கவும் முன்வந்துள்ளது.

## கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| UB-0434 | NPHZ-3569 | JS-7818 | 152-7853 |
| 158-9031 | 144-6990 | JO-3265 | HJ-3193 |
| GL-5668 | HI-6552 | MA-3269 | MC-6937 |
| GE-1784 | MC-9707 | NPGP-0350 | 155-3602 |
| GK-8407 | GJ-7397 | 147-7153 | HN-9782 |
| 147-2056 | 154-3705 | NPHS-2097 | JY-2847 |
| 148-4699 | JZ-8288 | NPJB-6949 | MI-6182 |
| GJ-4686 | 159-7884 | JR-6742 | JS-7886 |
| HA-6150 | GO-6101 | GV-0954 | MR-2764 |
| GS-9064 | 500-5806 | JA-2188 | MH-4041 |
| 103-8401 | EPGC-1404 | MP-8884 | JY-5573 |
| 132-9636 | HX-0574 | 147-5612 | 133-6780 |
| 140-8796 | HD-3161 | HY-5595 | MC-7563 |
| GI-0665 | NPHE-2136 | GW-5174 | HB-0910 |
| 144-4327 | JC-7207 | 148-2345 | JZ-6874 |
| GO-8475 | 128-1788 | JD-6281 | JU-9528 |
| JG-1153 | JJ-8918 | HR-9091 | JO-3040 |
| 126-9421 | 86-9278 | JH-0645 | HR-3857 |
| 153-8364 | MT-2188 | MX-3338 | JU-9541 |
| 156-9838 | MR-2982 | GA-5919 | JS-2176 |
| HD-6885 | WPJX-5048 | GZ-5648 | GN-1133 |
| HC-0954 | NPGS-6487 | MM-4000 | TL-5081 |
| 132-8541 | NPJT-5441 | HH-4263 | JG-9994 |
| JY-8730 | NPHU-2187 | JZ-8349 | 96-8821 |
| 144-3815 | 147-2187 | GF-3959 | 154-8756 |
| 114-0082 | EPJP-9139 | MM-3197 | GU-5713 |
| GW-5591 | HA-6086 | GF-9495 | MB-1645 |
| 156-2360 | NPMQ-6774 | 128-3049 | HH-4279 |
| 159-5715 | 500-4035 | HY-7689 | JU-4970 |
| MU-3483 | 155-9763 | JM-2309 | MA-7035 |
| GU-9973 | 139-3413 | GO-7002 | 121-3509 |
| 133-8071 | NPHW-2666 | JG-1151 | 131-1745 |
| 160-7753 | 157-8006 | MG-8942 | 150-7289 |
| 150-6642 | NPHC-7243 | 124-6682 | MI-0555 |
| 159-7928 | GZ-4269 | 500-7270 | 138-1969 |
| 147-2066 | MG-4930 | 134-7671 | MK-8127 |
| 152-0810 | NPJJ-8048 | JZ-5354 | NPHI-6089 |
| GP-4344 | 153-4408 | HM-9008 | 155-6077 |
| HG-0782 | JU-4773 | MT-2758 | HG-1247 |
| JT-8496 | NPJN-4350 | 156-4452 | HE-6164 |
| 500-0751 | MB-9214 | 130-3345 | 140-9256 |
| 156-4649 | GI-1796 | HG-0736 | HO-0497 |
| 158-6405 | MW-1398 | GY-9954 | 142-8692 |
| 144-4849 | MN-7140 | GU-5747 | 146-8833 |
| HC-3619 | JB-5123 | TL-4762 | JS-4851 |
| 144-3686 | TH-0468 | HG-0769 | 154-3813 |
| 142-2758 | GQ-1115 | 145-3799 | HW-6276 |
| 142-3132 | NPMB-1656 | 156-8448 | 150-5291 |
| HL-1586 | EPGG-0446 | JO-2449 | MD-9479 |
| HS-8128 | UB-0179 | 93-2015 | NPMQ-7912 |
| 502-0718 | HO-6833 | HC-3531 | 502-0338 |
| 158-8560 | 142-1524 | HR-7431 | 105-6854 |
| 143-1502 | NPHM-9634 | HX-0127 | 144-9559 |
| 126-4717 | 147-8486 | 102-7526 | 500-9505 |
| 500-9002 | NPJY-9788 | 136-3051 | GC-6557 |
| 113-3963 | 500-6362 | GQ-9349 | GR-5667 |
| 132-6098 | JL-0767 | MA-9302 | 113-7572 |
| HK-1612 | NPMG-8588 | 140-7115 | NPMR-7217 |
| 140-7258 | 125-3459 | HI-9992 | EPHT-9339 |
| 155-4363 | 501-0033 | 104-8246 | 134-3469 |
| 92-6011 | MX-3444 | JR-9865 | JD-4922 |
| JU-9459 | GY-4429 | HR-7477 | GR-8949 |
| MQ-2719 | JW-1939 | MM-3161 | HN-9747 |
| JY-5704 | JB-7578 | MT-9325 | 154-3706 |
| HV-4676 | MD-7499 | MQ-0038 | 104-3692 |
| JP-2914 | GB-6236 | HS-0235 | 144-1485 |
| HK-1350 | GF-6609 | 93-0159 | NPGU-0422 |
| 152-5727 | HE-6311 | 139-8758 | 500-8058 |
| 113-0162 | MG-7362 | NPMP-3528 | NPGI-7659 |
| 143-5861 | GO-3542 | NPHU-4059 | TS-8093 |
| 500-6491 | JL-2298 | NPJN-7752 | MH-7607 |
| WPGF-7841 | HH-2369 | NPMP-6547 | NPJZ-3337 |
| JC-5267 | NPJF-0943 | NWGA-6650 | NPMB-2751 |
| NPMQ-7895 | MD-9309 | NPHH-6216 | NPHO-0499 |
| NPJL-6577 | NPHH-4281 | 125-6144 | NPMP-6545 |
| MK-4797 | NPJN-7698 | 143-6764 | MG-7760 |
| 142-6817 | 135-6195 | NPHX-4663 | MN-9361 |
| MG-9589 | EPGQ-9888 | 500-9810 | 109-9781 |
| HK-3072 | JJ-5505 | MF-8116 | 103-3118 |
| NPME-8207 | 501-0010 | NPGM-0545 | 142-1491 |
| WPGB-3027 | HB-2090 | MD-5488 | 153-4125 |
| 140-2122 | MV-8813 | MK-9327 | JZ-9246 |
| 85-8429 | NPJB-8890 | NPGQ-0941 | MW-9194 |
| 500-5180 | NPJP-0218 | NPMC-8679 | 97-2885 |
| JG-6983 | NPHZ-4515 | NPJO-0790 | |

(தொடர்ச்சி நாளை)

# இலங்கை -இந்திய கப்பல் போக்குவரத்து இரு தரப்புக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும், இது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இரு நாடுகளுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று கைச்சாத்திடப்பட்டதெனவும் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கூறினார். கொழும்புத் துறைமுகத்துக்கும், தூத்துக்குடித்துறை முகத்துக்கும் இடையில் மூன்று கப்பல்களை இலங்கை கப்பல் கூட்டுத் தாபனம் சேவையில் ஈடுபடுத்தும். இந்தியாவும் இவ்வாறு மூன்று கப்பல்களை சேவையில் ஈடுப்படுத்தும். வாரத்தில் மூன்று நாட்கள், இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஆறு கப்பல்கள் பயணம் செய்யும் என அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கப்பல்களில் ஒன்றில் 300 தொடக்கம் 500 பேர் வரையில் பயணம் செய்ய முடியும் எனவும், ஒரு பயணி 100 கிலோகிராம் பொதியை எடுத்துச் செல்லலாம் எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் பயணத்திற்கு 8 மணித்தியாலம் வரை எடுக்கும் என் அவர் கூறினார்.

இலங்கை, இந்திய வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு இது வரப்பிரசாதமாக அமையும். மேலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு இதனால் மேலும் விருத்தியாகும் என அவர் கூறினார்.

# உள்ளூராட்சி தேர்தல் வியூகம் வகுக்கும் ரணில் – மனோ

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் நேற்றுப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

கொலொன்னாவை, அவிசாவளை ஆகிய பிரதேசங்களையும் மற்றும் கம்பஹா, களுத்துறை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களையும் சார்ந்த பிரதேச சபைகளில் இணைந்து போட்டியிட முடியுமா என்பது தொடர்பில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

மேலதிக பேச்சுவார்த்தைகளை அடுத்த வார ஆரம்பத்தில் தொடர்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலில் போட்டியிட குவியும் விண்ணப்பங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சி அங்கத்தவர்களிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி 10 ஆயிரம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்பதற்கு இவ்வளவு தொகையான விண்ணப்பங்கள் கிடைத்திருப்பது இதுதான் முதற்தடவையாகும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவரது அமைச்சில் நடந்த நிகழ்வொன்றின் பின் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான ஜனவரி 15 க்கு முன்னர் பத்து இலட்சம் விண்ணப்பங்களை எஸ்.எல்.எவ்.பி எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். இரண்டு நாட்களில் கட்சிக்கு 7000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# வெளி மாவட்டங்களுக்கான பேருந்து சேவை நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்திலிருந்து நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கு மேற்கொள்ளப்படும் தனியார் பேருந்து சேவைகளின் நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளது. அதன் விபரம் வருமாறு,

நேர அட்டவணையும் தரித்து நிற்கும் நேர விபரமும்

**கிளிநொச்சி**

| | |
|---|---|
| 6.00 - 6.30 a.m | கிளிநொச்சி |
| 6.30 - 7.00 a.m | கிளிநொச்சி |
| 7.35 - 8.05 a.m | கிளிநொச்சி |
| 8.45 - 9.15 a.m | கிளிநொச்சி |
| 9.15 - 9.45 a.m | கிளிநொச்சி |
| 9.45 - 10.15 a.m | கண்டாவளை |
| 10.15 - 10.45 a.m | இராமநாதபுரம் |
| 11.00 - 11.25 a.m | கிளிநொச்சி |
| 11.25 - 11.50 a.m | கிளிநொச்சி |
| 11.50 - 12.15p.m | கிளிநொச்சி |
| 12.45 - 1.10 p.m | கிளிநொச்சி |
| 1.35 - 2.00 p.m | கிளிநொச்சி |
| 2.40 - 3.10 p.m | விசுவமடு |
| 3.10 - 3.40 p.m | கிளிநொச்சி |
| 3.40 - 4.10 p.m | கிளிநொச்சி |
| 4.10 - 4.40 p.m | கிளிநொச்சி |

**வலைப்பாடு**

| | |
|---|---|
| 12.15 - 12.45 p.m | ஸ்கந்தபுரம் ஊடாக |

**முல்லைத்தீவு**

5.40 - 6.20 a.m
7.00 - 7.45 a.m
8.00 - 8.45 a.m
9.35 - 10.20 a.m
12.30 - 1.15 p.m
1.30 - 2.15 p.m
2.30 - 3.15 p.m
3.30 - 4.15 p.m

**மல்லாவி**

5.00 - 5.40 a.m
7.10 - 7.40 a.m
8.45 - 9.15 a.m
11.00 - 11.30 a.m
1.00 - 1.30 p.m
2.00 - 2.30 p.m
3.00 - 3.30 p.m
3.55 - 4.25 p.m

**முழுங்காவில்**

5.00 - 6.00 a.m
8.05 - 8.40 a.m
1.00 - 1.40 p.m
2.00 - 2.40 p.m

**வவுனியா**

| | |
|---|---|
| 5.30 - 6.05 a.m | யாழ் பேருந்துகள். |
| 6.15 - 6.45 a.m | |
| 6.45 - 7.15 a.m | |
| 7.25 - 7.55 a.m | |
| 7.55 - 8.25 a.m | |
| 8.35 - 9.05 a.m | |
| 9.05 - 9.35 a.m | |
| 9.35 - 10.05 a.m | |
| 10.05 - 10.35 a.m | |
| 10.35 - 11.05 a.m | |
| 11.05 - 11.35 a.m | |
| 11.35 - 12.05 p.m | |
| 12.00 - 12.35 p.m | வவுனியா பேருந்துகள் |
| 12.45 - 1.20 p.m | |
| 1.20 - 1.55 p.m | |
| 2.05 - 2.40 p.m | |
| 2.40 - 3.15 p.m | |
| 3.15 - 3.50 p.m | |
| 3.50 - 4.25 p.m | |

**மன்னார்.**

| | |
|---|---|
| 5.30 - 6.15 a.m | வவுனியா ஊடாக |
| 6.30 - 7.25 a.m | வவுனியா ஊடாக |
| 7.30 - 8.35 a.m | முழுங்காவில் ஊடாக |
| 8.40 - 9.35 a.m | முழுங்காவில் ஊடாக |
| 9.35 - 10.30 a.m | முழுங்காவில் ஊடாக |
| 11.00- 11.50 a.m | வவுனியா ஊடாக |
| 11.50 -12.45 p.m | வவுனியா ஊடாக |
| *12.45 - 2.05 p.m | வவுனியா ஊடாக |

**ஆழியவளை**

12.00 - 12.40 p.m

**மட்டக்களப்பு**

6.00 - 7.15 a.m
2.45 - 3.30 P.m
4.30 - 5.15P.m

**திருகோணமலை**

7.15 - 8.10 a.m
8.10 -9.00 a.m
10.30 - 11.15 a.m
12.30 - 1.15 p.m

**அம்பாறை (அக்கரைப்பற்று)**

9.15 - 10.30 a.m (Suspended)

**புத்தளம்**

2.30 - 3.15 Pm (Suspended)

**பதுளை**

5.00-6.00 p.m
6.00 - 7.00 p.m (Suspended)

**கண்டி**

5.30 - 6.30a.m
5.00 - 5.50p.m

**தியத்தலாவ**

7.00 pm - 8.00 p.m

**தங்காலை**

5.45 - 6.40p.m

# வடக்கு தமிழ் இளைஞர்கள் 336 பேர் பொலிஸ் பயிற்சி நிறைவு

## வட.கிழக்கில் கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

தமிழ் பேசும் 336 பொலிஸ் துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பயிற்சியினை நிறைவு செய்த நிலையில் இன்றையதினம் பொலிஸ் சேவைகுப் புதிதாக இணைத்து கொள்ளப்பட்டனர்.

இது தொடர்பான நிகழ்வு பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தலைமையில் களுத்துறையில் இடம்பெற்றது.

இதன்போது 320 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரும், 16 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றிய, பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய, நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை அடுத்து தமிழ் பேசுபவர்களுக்கும், பொலிஸில் சேவையாற்ற வாய்ப்புக் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைக்க முடியாது சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்தநிலையில், தமிழ் பேசுபவர்களை பொலிஸ் சேவையில் இணைத்து கொள்வதன் மூலம் அந்த பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

## யாழில் அதிகரிக்கும்...

நிலைவரம் குறித்து உரையாற்றுகையிலேயே சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். குடாநாட்டில் கடந்த சில வாரங்களில் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெற்றுள்ளது. இவற்றில் குறிப்பாக வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்ற மூன்று கொலைச்சம்பவங்களையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்ததன்படி தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளின் காரணமாக நிகழ்ந்தவையாக இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ். குடாநாட்டில் இக்குற்றச்செயல்களைத் தடுக்க பொலிஸாருக்கு கடமையிருக்கின்றது. அதற்கு பொதுமக்களது ஒத்துழைப்பு தேவை. எனது விருப்பம் உங்களது ஒத்துழைப்பு இருந்தால் நாளையே இக்குற்றச்செயல்களைக் கட்டுக்குள் கொண்டுவரலாம்.

இதற்கு யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் நீங்கள் கதைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஒரு வாரத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகளுடனும், வர்த்தகர் சங்கத்தினருடனும், வங்கி முகாமையாளர்களுடனும் கலந்தாலோசனை நடத்தி குற்றச்செயல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்த அவர், பொதுமக்கள் குற்றச்செயல்கள் குறித்தும், சந்தேகநபர்கள் குறித்தும் எவ்வித பயமும் இன்றி கீழ்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலமாகத் தெரிவிக்க முடியும். 0213210827, 0213217444 மற்றும் சட்டவிரோதமான காரியங்கள் நடக்குமானால் எமக்குத் தெரிவிக்கவும்.

பெண்கள் மீது சேட்டை புரிபவர்கள் குறித்து கடும்தண்டனை வழங்க பணிக்கப்பட்டுள்ளது. சிறைத்தண்டனையும் அபராதமும் வழங்கவும் பணிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பெருமளவு பொதுமக்கள், வர்த்தகர் சங்க பிரதிநிதிகள், வங்கியாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இறுதியாக பொதுமக்களது சந்தேகங்கள், கேள்விகளுக்கு பொலிஸ் அதிகாரிகள் தமது பதில்களையும் வழங்கினர். (54,பா)

## யாழ். குடாவில்...

முன்னணியின் பொதுச்செயலாளர் கலாநிதி என்.குமரகுருபரன் தெரிவித்தார்.

தேசிய கீதம் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் தமிழ் மக்களின் மனம் புண்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடுவதை தடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ் கட்சிகளின் அரங்கம் கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யானைகளின் கணக்கெடுப்பு



(கொழும்பு)

காட்டு யானை தொகைக் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. நடப்பு ஆண்டில் நாட்டில் உள்ள வளர்ப்பு மற்றும் காட்டு யானைகளின் தொகையைத் தெரிந்து கொள்ளவே இக்கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. நாட்டில் தற்பொழுது 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் காட்டு யானைகளும், கொம்பன் யானைகளும் உள்ளன என்று வனவிலங்கு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மனிதன் - யானை சண்டையில் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட 200 யானைகள் மரணிப்பதாகவும் அவர் சொன்னார்.

யானைகள் தேசிய சொத்தாக இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன.

## பல மாதங்களாக....

நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் திருத்தச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் மாகாண ரீதியிலான மேல் நீதி மன்றங்களில் பிணை கோரக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றார்.



பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# யாழ்.நோக்கி படையெடுக்க தயாராகும் முஸ்லிம் குடும்பங்கள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த யாழ். முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி நகர்வதற்கும், தமது முன்னைய இடங்களில் குடியமர்ந்து கொள்வதற்கும் தயாராகி வருகின்றனர்.

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 52,000 முஸ்லிம் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டிய நிலையில் புத்தளத்தில் இருப்பதாகவும் இவர்களுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வடபகுதியிலும் உயர் பாதுகாப்பு வலயங்களை சேர்ந்த 72,000 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளனர். இருப்பினும் இதுவரை உயர் பாதுகாப்பு வலயத்தில் 3 கிராமங்களில் பொது மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் பொது மக்களை மீள்குடியேற்றுவது பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

## தேசிய அடையாள அட்டை எட்டு நாளில் கிடைக்கும்

(கொழும்பு)

துரித சேவை மூலமாக தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி தேசிய அடையாள அட்டைக்காக விணணப்பித்தோர் தாம் விண்ணப்பித்த திகதியிலிருந்து எட்டுத் தினங்களுக்குள் அதனைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை நேற்று முதல் அமுல்படுத்தப்படுவதாகத் தேசிய அடையாள அட்டைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒருவர் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்து மூன்று மாதம் முதல் இரு வருடங்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை இந்தப் புதிய திட்டம் மூலம் இல்லாமல் செய்யப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்திருக்கும் 20,000 பேருக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றினை அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## உயிர் அச்சுறுத்தலுடன்...

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். பாடசாலை மாணவர்கள் 30 பேர் கடத்திச் செல்லப்பட்டமை (இவர்களில் 28 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்) உட்பட கடத்தல் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

போர் முடிவடைந்த பின்னரும் இவ்வாறான வன்முறைகள் தலைதூக்கி இருப்பதையிட்டு தேவாலய பங்குத் தந்தைகள் தமது பங்கிலுள்ள மக்களிற்கு அறிவுறுத்தி அவதானமாக இருக்குமாறு பணித்து வருகின்றனர்.

நாங்கள் கடவுளை மன்றாடுகின்றோம். துப்பாக்கிதாரிகள் அடுத்து எங்கே, எப்போது என்ன செய்வார்கள் என்று தெரியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம் - இவ்வாறு கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் பிரதிநிதியான சங்கானையைச் சேர்ந்த ஜயந்தன் இமானுவேல்பிள்ளை தெரிவித்தார். இதே சங்கானையில்தான் இந்து மதகுரு ஒருவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டதுடன், அவரது இரண்டு மகன்மார் சுட்டுக் காயப்படுத்தப்பட்டிருந்தனர்.

யாழ் மக்களின் புத்தாண்டு படுகொலைகள், கடத்தல்கள், கொள்ளைகள் என்பவற்றுடனேயே ஆரம்பித்தது. மக்கள் அச்சம் காரணமாக மாலைநேர தேவாலயப் பூசைக்கு செல்லாது, பகலில் அதுவும் கூட்டமாகவே சென்றனர்.

எல்லோரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர். கொலைகள், கொள்ளைகளை நிறுத்த உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் - இவ்வாறு கூறினார் சென்.ஹென்றியரசர் கல்லூரியின் சமய குருவான வணக்கத்திற்குரிய ஜே.ஏ.யேசுதாஸ் அடிகளார்.

படுகொலைச் சம்பங்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த ஆவண செய்யும்படி யாழ். ஆயரிடம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருப்பதாகவும், பல உள்ளூர் அரச அதிகாரிகளையும் சந்தித்து இதே கோரிக்கையை முன்வைத்திருப்பதாக, கரித்தாஸ் மனித உரிமைகள் அபிவிருத்தி அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் வணக்கத்திற்குரிய அருளானந்தம் ஜொனாலி யாவிஸ் அடிகளார் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டின் உண்மை நிலையைக் கண்டறிய அனைத்துக் கட்சிக் குழுவொன்று அங்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது என்றும் அந்த இணையம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

### கோத்தபாய - ரட்ணசிறி....

அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பாதுகாப்பு செயலாளர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரச தரப்பில் இருந்து கொண்டு வர முடியுமா? என சட்ட மா அதிபரிடம் கோத்தபாய ராஜபக்ஷ ஆலோசனையையும் பெற்றுள்ளார்.

எனினும், அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுகின்ற அமைச்சர் ஒருவரை பதவி நீக்கவும், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதாகவும், அதற்கு நம்பிக்கை இல்லா பிரேரணையை கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை எனவும் சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ரட்ணசிறி அரசாங்கத்துக்கு எதிராகவும், தமக்கு எதிராகவும் வெளியிட்ட கருத்துக்களை அடுத்து, கோபமுற்ற நிலையிலேயே பாதுகாப்பு செயலாளர் இவ்வாறான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ரட்ணசிறி விக்ரம நாயக்க பாதுகாப்பு வாகனங்களுடன் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், பாதுகாப்பு செயலாளரின் வருகையின் பொருட்டு அவர் பயணித்த பாதை போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

இதனை அடுத்து தாம் முன்னாள் பிரதமர் எனவும், தமக்கு வழி விடுமாறும் ரட்ணசிறி தரப்பில், கடமையில் இருந்து பாதுகாப்பு அதிகாரிகளிடம் கோரப்பட்டது.

எனினும், பாதுகாப்பு செயலாளர் செல்லும் வழியில் எந்த தரப்பினரையும் அனுமதிக்க வேண்டாம் என உயர் மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த காவற்துறையினர், எனவே ரட்ணசிறியையும் அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளனர்.

இதனை அடுத்து கோபமுற்ற ரட்ணசிறி, தமக்கு தடை சொல்ல முடியாது, தான் போகிறேன், முடிந்தால் சுட்டுக் கொல்லுங்கள் எனக் கூறி தடை விதிக்கப்பட்டிருந்த பாதையின் ஊடாக பயணித்துள்ளார்.

இந்த தகவல், உள்நாட்டு இணையத்தளம் ஒன்றில் வெளியானதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த பாதுகாப்பு செயலாளர், ரட்ணசிறிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது



வடபகுதி தமிழ் இளைஞர்கள் நேற்று பொலிஸ் உத்தி யோகத்தர்களாக களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலிருந்து பயிற்சியினை முடித்து வெளியேறுவதைனைப் படங்களில் காணலாம்.

## சலுகைகள் வேண்டாம் உரிமைகளுக்கே முன்னுரிமை

### இதுதான் வடக்கு மக்களின் உள்ளக்கிடக்கை

(கொழும்பு)

வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத்தின் சலுகைகளைவிட உரிமைகளுக்கே முன்னுரிமையளிப்பதாக யாழ் மாநகர முன்னாள் பிரதி மேயர் எம்.பஷீர் தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் புத்தளம் மாவட்ட அமர்வில் சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர்,

வட மாகாணத்தில் வாழும் மற்றும் வாழவுள்ள மக்களின் புரிந்துணர்வு செயற்பாடுகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது.

அதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவற்றையும் உள்ளீர்த்து சமாதான பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் அங்கு முன்வைத்தார்.

முஸ்லிம்களின் இழக்கப்பட்ட சொத்துக்களுக்கான நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். அத்துடன் வட மாகாண முஸ்லிம்களின் தேவை குறித்து ஆராய தனியான ஜனாதிபதி ஆணைக் குழு அமைக்க வேண்டும்.

வட மாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள், வீடமைப்பு வசதிகள் குறித்து தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை ஆணைக் குழு ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## முளைவிட ஆரம்பிக்கிறது பிரிவினைவாதக் கருத்துக்கள்

### மலேசியப் பல்கலைக்கழகங்களில் பரப்புரை

(கொழும்பு)

மலேசிய பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தமிழ் பிரிவினைவாதக் கோட்பாடுகள் குறித்த கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதாக அந்த நாட்டின் உள்நாட்டு அமைச்சர் ஹிசாமுடீன் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

நிவ் ஸ்ட்ரேயிட் டைம்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய தீவிர போக்கு, தமிழ் பிரிவினைப் போக்கு என்பன பலத்தரப்பினராலும் மலேசிய பல்கலைக்கழகங்களில் பரப்பப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அது எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது, பயங்கரவாத தோற்றத்துக்கான சமிக்ஞையாகவோ இல்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இதனை அவ்வாறே கைவிட்டுவிடப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான கருத்துப் பரம்பல், போராட்டங்கள் அல்லது வன்முறைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்



தைத்திருநாளை முன்னிட்டு 300 வகை புதிய டிசைன்களில் வரவழைக்கப்பட்ட திருமண அழைப்பிதழ்கள் 10% கழிவுடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.விரைந்து செல்லுங்கள்.

கஜசங்கவி சென்ரர் அன்ட் கஜசங்கவி பிறின்டேர்ஸ்

T.P:-021 222 7885

237, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(C/356)

யாழ்.மாவட்ட மக்களுக்கு

ஷாலோம் SHALOM

SHALOM வழங்கும் நற்செய்தி...!

உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.

குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...

வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-

SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/272)

தொலைபேசி : 0217901798 - 0771044861

தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.